8/12/75

தமிழ் இலக்கணம்.

TAMIL ILAKKANAN 1017

பாளையங்கோட்டை

சி. எம். எஸ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஞா. சா. துரைசாமிபிள்ளையால்

இயற்றப்பட்டது

DURAISWAMI PILLAI, G.S

MADRAS

P. R. RAMA IYAR & CO.

ESPLANADE ROW.

1911

[Price, [illegible]2.

CONTENTS.

பொருளடக்கம்.

PAGE

தமிழிலக்கணம்.

எழுத்ததிகாரம்.

ஒலிவடிவங்களும், ஒலியின் வேறுபாடுகளும்.

(Classification of Sounds.)

ஒரு பாஷையைப் பிழையின்றிப் பேசுதற்கும் எழுதுதற்கும் யோக்ய சாதனமாயிருப்பது அப்பாஷையின் இலக்கணமேயாம். அவ்வாறே தமிழிலக்கணமானது தமிழ்ப்பாஷையை வழுவின்றிப் பேசுதற்கும் எழுதுதற்கும் சாதனமாயிருக்கிறது.

தமிழிலக்கணமானது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளையுடையது.

இவற்றுள் எழுத்தாவது சொற்கள் உண்டாவதற்கு முதற்காரணமாகிய ஒலிவடிவேயாம். இவ்வொலி வடிவங்களைக் குறிப்பதற்கேற்பட்ட வரிவடிவங்களும் எழுத்துக்களென அழைக்கப்பெறும்.

தமிழ் எழுத்துக்கள் முதல், சார்பு என இருபிரிவின.

பிற எழுத்துக்களின் உதவியின்றித் தாமாகவே இயங்கவல்லன, முதலெழுத்துக்களாம். அவை உயிர், மெய் என இருபிரிவின.

ஜீவர்களில் மெய்யாகிய உடலானது உயிராகிய ஜீவனில் வழிப் பயனின்றிப் பாழ்படும் தன்மையேபோல மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்தின்றி யாதும் பயனிலவாம். உடலுக்கு ஜீவனளிக்கும் உயிரேபோல் மெய்யெழுத்துக்கு உயிரெழுத்து இன்றியமையாதது.

இக்காரணம் பற்றியே முதல் எழுத்துக்கள் உயிர், மெய் எனக் காரணப்பெயர் பெற்றன.

உயிரெழுத்து அ-ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, ஐ, ஒ-ஓ, ஔ எனப் பன்னிரண்டு. அவற்றுள்,

அ, இ, உ, எ, ஒ ஐந்தும் குறிலாம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஏழும் நெடிலாம்.

அ, இ, உ மூன்றும் மொழிக்குமுதலில்வந்து சுட்டுப்பொருளைக் கொடுத்து நிற்கும்போது சுட்டெழுத்துக்களெனப் பெயர் பெறும்.

இச்சுட்டுத்தானும் அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவிதமாம்.

அ, இ, உ மூன்றும் வார்த்தைகளின் அகத்தே அல்லது உள்ளாகவே இருந்து சுட்டுப்பொருளைத்தருமேல் அகச்சுட்டாம்.

(உ-ம்.) அவன், இவன், உவன். இவற்றிலுள்ள சுட்டெழுத்துக்களைப் பிரிக்கப் பதங்கள் பொருளிழத்தல் காண்க.

அ, இ, உ மூன்றும் வார்த்தைகளின் புறத்தே அல்லது வெளியே யிருந்து சுட்டுப்பொருளைத் தருமேல் புறச்சுட்டாம்.

(உ-ம்.) அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன். இப்பதங்கள் அவைகளிலுள்ள சுட்டு எழுத்துக்கள் எடுபட்டகாலையும் தத்தமக்குரிய பொருளிழவா.

அகரம் சேய்மைச்சுட்டு, இகரம் அண்மைச்சுட்டு, உகரம் இடைநின்ற அல்லது பின்னின்ற சுட்டு.

எ, ஆ, ஓ, ஏ என்னும் நான்கு உயிரெழுத்துக்களும், யா என்னும் உயிர்மெய்யெழுத்தும் வினாப்பொருளைப் பயந்துநிற்க வினாவெழுத்துக்களெனப் பெயர்பெறும். இவையும் சுட்டெழுத்துக்களைப்போல வார்த்தைகளின் அகத்தும் புறத்தும் நின்றும் வினாப்பொருளைத் தரும். எ, யா இரண்டும் வார்த்தைகளின் முதலிலும், ஆ, ஓ வார்த்தையின் ஈற்றிலும், ஏ ஈரிடங்களிலும் நின்று வினாப்பொருள் பயக்கும். எழுத்துக்கள் ஈற்றில்வந்து வினாப்பொருளைத் தரும்போது புறவினாவாகவே வரும்.

(உ-ம்.) எவன், யாவன், ஏவன்—அகவினா முதலில்.
எம்மனிதன், யாங்ஙனம்—புறவினா முதலில்.
அவனா, அவனோ, அவனே—புறவினா ஈற்றில்.

மெய்யெழுத்து க்-ங், ச்-ஞ், ட்-ண், த்-ந், ப்-ம், ய், ர், ல், வ், ழ், ள், ற்-ன் எனப் பதினெட்டாம். அவை வலி, மெலி, இடை யென மூப்பிரிவின.

வல்லினம் க், ச், ட், த், ப், ற் என ஆறாகும்.

மெல்லினம் ங், ஞ், ண், ந், ம், ன் என ஆறாகும்.

இடையினம் ய், ர், ல், வ், ழ், ள் என ஆறாகும்.

மாத்திரை. எழுத்துக்களை யுச்சரிப்பதற்கு ஏற்பட்ட கால வரையறையே மாத்திரையாம். கண் இமைக்கும் நேரமும், கைந் நொடிக்கும் நேரமும் ஒருமாத்திரை யளவாம். குற்றெழுத்துக் குரியமாத்திரை ஒன்று, நெட்டெழுத்துக்குரிய மாத்திரை இரண்டு, ஒற்றெழுத்துக்குரிய மாத்திரை அரை. எழுத்துக்கள் தத்தமக்கு ஏற்பட்ட மாத்திரையளவையினும் நீண்டொலிப்பதும் குறைந்தொலிப்பதுமுண்டு. அவ்வாறு நீண்டொலிப்பவற்றுக்கு அளபெடையெனவும், குறுகியொலிப்பவற்றுக்குக் குறுக்கம் எனவும் பெயர்.

அ—குற்றெழுத்து: மாத்திரை ஒன்று.

ஆ—நெட்டெழுத்து: மாத்திரை 2.

க்—ஒற்றெழுத்து: மாத்திரை ½.

அளபெடையும் குறுக்கமும் பின்னர் காண்க.

இனவெழுத்து. ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவை இனவெழுத்தெனப்படும். நெடிலுக்குக் குறிலும் வல்லெழுத்துக்களுக்கு மெல்லெழுத்துக்களும் இனமாம். ஐகாரத்தை நீட்டி யொலிக்க இகரவொலியும் ஔகாரத்தை நீட்டி யொலிக்க உகரவொலியும் பிறத்தலால் ஐகார ஔகாரங்களுக்கு முறையே இகரமும் உகரமும் இனவெழுத்துக்களாம்.

சார்பெழுத்து தானாகவன்றி, உயிர், மெய் எனும் இரு முதலெழுத்துக்களின் சேர்க்கை அல்லது சார்பினால் வழங்குதலின் சார்பெழுத்தெனப் பெயர்பெற்றது. சார்பெழுத்து, உயிர்மெய், ஆய்தம், உயிரளபு, ஒற்றளபு, இகரக்குறுக்கம், உகரக்குறுக்கம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்துப்பிரிவுகளை யுடையது.

உயிர்மெய். தொகை 216. மாத்திரை: நெடில், 2; குறில், 1.

உயிரெழுத்துப் பன்னிரண்டும் தனித்தனி மெய்யெழுத்துப்பதினெட்டோடும் சேர்ந்துவர உண்டாகும் 216-ம் உயிர்மெய்யெழுத்துக்களாம். அவையுண்டாகும் விதம்:—

அகரம் மெய்யெழுத்தோடு சேரின் மெய்யிலுள்ள புள்ளி நீங்கி மற்று உருவம் இருந்தவாறே நிற்கும். (உ-ம்.) க்+அ=க.

அகரம் தவிர்ந்த மற்ற வுயிர்கள் சேரும்போது புள்ளி நீங்கு வதோடு மெய்யின் உருவமும் சிறிது மாறுபடும்,

(உ-ம்.) க்+உ=கு.

இவ்வாறுண்டாய உயிர்மெய்யெழுத்துக்கள் மெய்யெழுத்தின் மாத்திரையை ஒழித்து அவ்வவ்வெழுத்தினுள்ள உயிர்மாத்திரை யளவாகவே ஒலிக்கும்.

(உ-ம்.) க் ($\frac{1}{2}$) + இ (1) = கி (1).

க்—இவ்வெழுத்தின் அரைமாத்திரை நீங்க, இகரத்தின் ஒரு மாத்திரையே 'கி' எனும் உயிர்மெய்க்கானது.

உயிர்மெய்யெழுத்துக்களை உச்சரிக்கும்போது முதலில் மெய்யின் தொனி உண்டாகிப் பின்னரே உயிரின் ஒலி உண்டாகும்.

ஆய்தம். தொகை 8. மாத்திரை $\frac{1}{2}$.

இவ்வெழுத்து ஒரோ விடங்களில் உயிர்போன்றும் ஒரோ விடங்களில் மெய்போன்றும் ஒலிக்கும். எனினும் இது உயிரு மன்று, மெய்யுமன்று, உயிர்மெய்யுமன்று. கேடகம் எனும் ஆய்தத்தில் பதிக்கப்பெற்ற மூன்று வெண்கல ஆணிகளொப்ப (ஃ) முப்புள்ளி வடிவாயமைந்திருத்தலின் இதனை ஆய்தவெழுத் தென்றார் போலும்.

இவ்வெழுத்து, பதங்களில் குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையே வழங்கும்.

(உ-ம்.) அஃகு, கஃசு என்பன போன்றவை.

இவ்வாய்தம் முற்றாய்தமெனவும் அழைக்கப்பெறும். வல்லெழுத்திற்குமுன்வரும் ஆய்தம் ஆறு. சுட்டுவகரத்தின்முன் வல்லெழுத்து வர வகரம் ஆய்தமாதல் ஒன்று.

(உ-ம்.) அவ்+கடிய அஃகடிய.

விரித்தல் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

(உ-ம்.) அது அஃது.

எனவே முற்றாய்தம் தொகை எட்டாதல் காண்க.

உயிரளபு. தொகை 21. மாத்திரை 3.

செய்யுளில் ஓசை குறைந்த விடத்து நெட்டெழுத்துக்கள் எழும் மொழி முதல், இடை, கடையெனும் மூவிடங்களிலும் தம் அளவையாம் இரண்டு மாத்திரையினும் அதிகமாய் நீண்டொலிக்கும்.

ஏழு நெடிலும் மொழி மூவிடங்களிலும் அளபெடுக்க உயிரளபெடை 21 ஆம். ஆனால் ஔகாரம் மொழி இடை, கடை யிடங்களிலும் வாராது, எனவே 19 ஆம்.

செய்யுளில் சில இடங்களில் ஓசை குன்றியிருப்பவும் குற்றெழுத்து இன்னிசையின் பொருட்டு நெட்டெழுத்தாய் அளபெடுக்கும். மற்றுஞ் சில பிறிதோர் சொல்லாகும் பொருட்டு அளபெடுக்கும். இவற்றுள் முந்தினது இன்னிசையளபெடை யென்றும் பிந்தினது சொல்லிசையளபெடை யென்றும் பெயர்பெறும். ஆக, 19 + இன்னிசை 1 + சொல்லிசை 1 மொத்தம் உயிரளபெடை 21 ஆதல் காண்க.

பேசுங்காலத்து இந்நெட்டெழுத்துக்களை இரண்டு மாத்திரைக்குமேல் நீட்டியுச்சரிப்பதனாலும் எழுதுங்காலத்து அளபெடுத்த நெட்டெழுத்திற்கினமான குற்றெழுத்தை அடுத்து எழுதுவதினாலும் உயிரளபெடை யுணரப்படுகிறது.

(உ-ம்.) 'ஓஒதல்வேண்டும்' ... மொழிமுதல் உயிரளபெடை.
'உடாஅதம்' ... மொழியிடை உயிரளபெடை.
'நீதொறீஇ' ... மொழிகடை உயிரளபெடை.
'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்சார்வாய்' .. இன்னிசையளபெடை.

[கெடுப்பதும் என விருப்பினும் ஓசைகுன்றாமை நோக்க.]
'உரனசைஇயுள்ளந்துணையாக'...சொல்லிசையளபெடை.
[நசையென்னும் பெயர்ச்சொல் வினையெச்சமாயினமை நோக்க.]

ஒற்றளபு. தொகை 42. மாத்திரை 1.

ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஃ என்னும் இப்பதினொரு எழுத்துக்களும் செய்யுளில் ஓசை குறைந்தவிடத்து மொழி இடை, கடையிடங்களிலும் ஒரு குறிலை யடுத்தும் இருகுறிலை யடுத்தும் தத்தம் மாத்திரையினும் அதிகமாக நீண்டொலிக்கும்.

எனவே ஒவ்வோர் எழுத்தும் நாலிடங்களில் அளபெடுக்கும் ஆதலால் ஒற்றளபெடையின் தொகை 44 ஆகும். ஆனால் ஆய்தம் மொழிக்குக் கடையில் வாராது. அதற்குரிய இரண்டும் நீங்க ஒற்றளபெடைத் தொகை 42 ஆதல் காண்க.

பேச்சில் ஒற்றை நீட்டியுச்சரிப்பதனாலும் எழுத்தில் அளபெடுத்தஒற்றை இரட்டித்து எழுதுவதனாலும் ஒற்றளபு அறியப்படும்.

(உ-ம்.) 'எங்கிறைவனுளன்' / 'இலங்கு வெண்பிறைசூடீசன்' — ஒரு குறிற் பின்னும் இரு குறிற் பின்னும் மொழியிடையில் ஙீ அளபெடுத்தது.

'அங்கனிந்த அருள்' / 'மடங்கலந்த மனனே' — ஒரு குறிற் பின்னும் இரு குறிற் பின்னும் மொழிகடையில் ஙீ அளபெடுத்தது.

அவ்வாறே பிற ஒற்றுகளும்.

இகரக்குறுக்கம். தொகை 37. மாத்திரை ½.

குற்றுகர மொழிகட்குப் பின்னர்வரு மொழியில் யகரம் வந்து புணர நிலைமொழியீற்று உகரம் இகரமாய் மாறும். இவ்விகரமும், 'மியா' வெனும் அசைச்சொல்லிலுள்ள இகரமும் தம்மாத்திரையிற் குறுகும்.

36 குற்றுகரத்தினாலும் உண்டாகும் இகரம் 36. அசைச சொல் மியாவிலுள்ள இகரம் மூன்று. ஆகக் குற்றியலிகரம் 37 ஆதல் காண்க.

(உ-ம்.) சென்மியா.

சுக்கு	+ யாது	சுக்கியாது
கச்சு		கச்சியாது
பட்டு		பட்டியாது.
வித்து		வித்ியாது
கொம்பு		கொம்பியாது.
கன்று		கன்றியாது

உகரக்குறுக்கம். தொகை 36. மாத்திரை ½.

வல்லெழுத்தின் மேல் ஏறிய உகரங்களாகிய கு, சு, டு, து, பு, று எனும் ஆறும் தனிக்குறில் தவிர்ந்த மற்ற எழுத்துக்களோடு சேர்ந்து மொழிக்கு ஈற்றில்வரின் அவற்றின் மேலுள்ள உகரம் தம் மாத்திரையிற் குறுகும். அதாவது,—

குற்றுகரமொழி: 1. கு, சு, டு, து, பு, று க்களில் முடிந்திருக்கவேண்டும்.

2. இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலாகவேண்டும்.

3. ஈரெழுத்தாயின் முதலெழுத்து நெட்டெழுத்தாக விருத்தல் வேண்டும்.

குற்றுகரங்கள் ஆறுவிதப்படும். அவையாவன: நெடிற்றொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர். இவற்றுள் ஈரெழுத்தாலாகிய குற்றுகர மொழிகள் நெடிற்றொடராம். மற்றத்தொடர்கள் ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து எவ்வெழுத்தோ அத்தொடரேயாகும்.

ஆறு தொடர்களுக்கும் ஈற்றில் ஆறு எழுத்துக்களும் வரக் குற்றுகரம் 36 ஆதல் காண்க.

(உ-ம்.) ஆடு—நெடிற்றொடர். சுட்டு—வன்றொடர்.
முரடு—உயிர்த்தொடர். வண்டு—மென்றொடர்.
எஃகு—ஆய்தத்தொடர். எய்து—இடைத்தொடர்.

ஐகார ஔகார குறுக்கங்கள். தொகை. ஐகாரக்குறுக்கம் 3; ஔகாரக்குறுக்கம் 1. மாத்திரை 1.

ஐகார ஔகார எழுத்துக்கள் ஐ, ஔ என்பனபோல் தனித்து ஓரெழுத்து ஒருமொழியாய் வந்தாலன்றி மற்றவெழுத்துக்களோடு சேர்ந்து மொழிக்கு முதல், இடை, கடைகளில் வரும்போது மாத்திரையிற் குறுகும்.

ஐகாரம் மொழி மூவிடத்திலும் வருதலால் தொகை மூன்றும்.

ஔகாரம் மொழிமுதலில் மாத்திரம் வந்து மற்ற ஈரிடங்களிலும் வாராமையால் அதன் தொகை ஒன்றேயாம்.

(உ-ம்.) தையல், வளையம், கடை, வௌவால்.

மகரக்குறுக்கம். தொகை 3. மாத்திரை $\frac{1}{4}$.

லகர ளகர மெய்கள் னகர ணகரங்களாக மாறுபட்டு வரும்பொழுது அவற்றை யடுத்து நிற்கும் மகரமும், வகரத்திற்கு முன்வரும் மகரமும் மாத்திரையிற் குறுகும்.

(உ-ம்.) மருளும் - மருண்ம்.
போலும் - போன்ம்.
நீயும்வா.

ணகர னகரங்களுக்குப் பின்வரும் மகரம் 2. வகரத்திற்கு முன்வரும் மகரம் 1. ஆக மகரக்குறுக்கம் 3 ஆதல் காண்க.

ஆய்தக்குறுக்கம். தொகை 2. மாத்திரை $\frac{1}{4}$.

குற்றெழுத்தை யடுத்த லகர ளகரங்களோடு தகரம் வந்து புணர லகர ளகரங்கள் ஆய்தமாகும். இவ்வாய்தமே குற்றாய்த மெனப்படும்.

(உ-ம்.) பல்+தொடை=பஃறொடை,
முள்+தீது=முஃடீது.

லகரமாறிய ஆய்தம் ஒன்று. ளகரமாறிய ஆய்தம் ஒன்று ஆகக் குற்றாய்தம் இரண்டாதல் காண்க.

மொழிமுதலெழுத்துக்கள. பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்குமுதலில் வரும்.

இவற்றுள் க, ச, த, ந, ப, ம ஆறும் 12 உயிரோடுங்கூடி மொழிமுதலாம்.

வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டுயிரோடுங் கூடி மொழி முதலாம்.

(உ-ம்.) வலி, வால், விடு, வீடு, வெற்றி, வேல், வை, வௌவால்.

யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு எழுத்தோடுங் கூடி மொழிமுதலாம்.

(உ-ம்.) யவனர், யானை, யுத்தி, யூகம், யோகம், யௌவனம்

ஞகரம் அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடுங்கூடி மொழி முதலாம்.

(உ-ம்.) ஞரல்வு (ஒலி), ஞாஞ்சில் (கலப்பை), ஞெகிழி (தீ), ஞொள்கல் (இளைத்தல்)

ஙகரம் அகரத்தைப் பொருந்தி மாத்திரம் மொழிமுதலாகும். அக்காலத்திலும் முச்சுட்டையும் எகரவினாவையும் யாவினாவையும் அடுத்தே வரும்.

(உ-ம்.) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்.

எனவே இவ்வெழுத்துக்களன்றி ஏனைய பிறவெழுத்துக்களை முதலாகவுடைய பதங்கள் தமிழ்ப்பதங்களல்லவெனக் காண்க.

டம்பி, டாம்பம், ஜவாப், ஜாதிகா முதலியன பிறபாஷையினின்று தமிழில் வந்து வழங்குவனவாம்.

வடமொழியிலிருந்து தமிழில் வழங்கும் பதங்களில் ரகரத்தை முதலிலுடையன அ, இ, உ இம்மூன்றிலொன்றை முதலிற் பெற்றும், லகரத்தை முதலிலுடையன இ, உ இவ்விரண்டிலொன்றை முதலிற்பெற்றும், யகரத்தை முதலிலுடையன இகரத்தை முதலிற் பெற்றும் வழங்கும்.

(உ-ம்.) அரம்பை, இராகம், உரோமம், இலாபம், உலோபம், இயக்கன்.

மொழியீற்றெழுத்துக்கள். பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள எனும் மெய்களும் குற்றுகரமும் ஆகிய இவை மொழிக்கு ஈற்றில் வழங்கும்.

ஆகார ஈகாரங்களை ஈற்றிலுடைய வடமொழிகள் தமிழில் பெரும்பாலும் ஐகார. இகரங்களாக மாறும்.

(உ-ம்.) சாலா - சாலை. புரீ - புரி.

போலி. மொழிகளில் முதல், இடை, கடை யெனும் மூவிடங்களிலும் சிற்சில எழுத்துக்கள் தம்மின் வேறாய சில எழுத்துக்களைப் போன்றொலிக்கும். இவை போலி யென்றழைக்கப்படும்.

முதற்போலி. சகர, ஞகர, யகரங்களுக்கு முன் உள்ள அகரம் ஐகாரத்தை யொத்தொலிக்கும.

(உ-ம்.) பசல் - பைசல், மஞ்சு - மைஞ்சு, மயல் - மையல்.

நகரம் ஞகரத்தைப் போன்றொலிக்கும். (உ-ம்.) நண்டு-ஞண்டு.

இடைப்போலி. சகர, ஞகர, யகரங்களுக்கு முன் உள்ள அகரம் ஐகாரத்தை யொத்தொலிக்கும்.

(உ-ம்.) அமச்சு - அமைச்சு, இலஞ்சி - இலைஞ்சி, அரயர் - அரையர்.

ஐகார, யகரங்களுக்குப் பின் நகரம் ஞகர மொக்கும்.

(உ-ம்.) ஐந்நூறு - ஐஞ்ஞூறு, சேய்நலூர் - சேய்ஞலூர்.

கடைப்போலி. அஃறிணைப்பெயர் ஈற்று மகரம் னகர மொக்கும். (உ-ம்.) அறம் - அறன்.

குற்றுகரம் அர் ஒக்கும். (உ-ம்.) வண்டு - வண்டர்.

லகரம் ரகர மொக்கும். (உ-ம்.) சோம்பல் - சோம்பர்.

எழுத்தியல் முற்றிற்று.

சொல்லதிகாரம்.

பெயர்ச்சொல்லும், பெயரின்சம்பந்தங்களும்.
(Nouns. Their Relations.)

பெயர்ச்சொல். யாதேனும் ஒரு பொருளுக்குக் காரணப்பெயராகவேனும் இடுகுறிப்பெயராகவேனும் வந்து, வேற்றுமை யுருபுகளை ஏற்கக்கூடியதாய் இருதிணை, ஐம்பால், மூவிடம் இவற்றுள் ஏதேனும் ஒருதிணை, ஒருபால், ஓரிடத்துக் குரியதாயேனும் இரண்டிற்குப் பொதுவாயேனும் வருவது பெயராம்.

திணை. உயர்திணை அஃறிணை யென இருபிரிவானது.

உயர்திணை. மக்கள், தேவர், நரகர் உயர்திணையாம்.

அஃறிணை. உயர்திணையல்லாத உயிருள்ளனவும் உயிரற்றனவுமாயவை அஃறிணையாம்.

உயர்திணைக்குரிய பால்கள் மூன்று—ஆண், பெண், பலர்.

ஆண்பால். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், சுட்டு, வினா முதலியவற்றினடியாய் வரும் னகரவீற்றுச் சொற்களும், நம்பி, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் முதலிய பெயர்களும் ஆண்பாற் பெயர்களாம்.

(உதாரணம்.)

நமன், ஒருவன், அவையத்தான், பொன்னன்—பொருளால் வருபெயர்.

வெற்பன், மறவன், ஆயன், ஊரன், சேர்ப்பன், சோழியன், சருவூரான், வானத்தான்—இடத்தான் வருபெயர்.

மூவாட்டையான், வேனிலான், தையான், ஆதிரையான், காலையான்—காலத்தான் வருபெயர்.

திணிதோளன், குறுந்தாளன்—சினையான் வருபெயர்.

பெரியன், புலவன், பொன்னொப்பான், கூனன், கரியன், மானுடன், பார்ப்பான், சேரன், ஆசிரியன்—குணத்தான் வருபெயர்.

ஓதுவான், கணக்கன், தொழிலான் வருபெயர்.

அவன், இவன், உவன், எவன், யாவன், ஏவன், பிறன்—சுட்டு முதலியவற்றான் வருபெயர்.

நம்பி, விடலை முதலிய மேல்விதியிற் கொடுக்கப்பட்டவை.

பெண்பால். மேல் விதியில் கூறிய பொருள் முதல் வினா ஈறாக வுள்ளவற்றோடு இறுதியில் ளகர மெய்யேனும் இகரமேனும் சேர்ந்துவரும் சொற்களும், தோழி, செவிலி, மகடூஉ, நங்கை முதலியனவும் பெண்பாலாம்.

(உ-ம்.) மேல் ஆண்பாலுக்குக் கூறிய உதாரணங்களுள் பெரும்பாலும் ளகரவீறும், எண்ணுப்பெயர்க்கு இகரவீறும் சேர்க்க உண்டாகும்.

தோழி முதலியன விதியிற் கூறப்பட்டன.

பலர்பால். மேல் ஆண்பாலுக்குக் கூறிய பொருள் முதல் வினா ஈறாயுள்ளவற்றி னடியாய்ப்பிறந்த ரகரமெய் ஈற்றுச்சொற்களும் கள் ஈற்றுச் சொற்களுமாம்.

(உதாரணம்.)

தமர், எமர், இருவர், மூவர் எனப் பொருளாதி யாறனோடும் ஒட்டுக.

கோக்கள், மனுக்கள்—பகுதிப்பொருள் விகுதியிற்றுப் பலர்பால்.

தமர்கள், இருவர்கள்—விகுதிமேல் விகுதி பெற்றவை.

மாந்தர், மக்கள் முதலியனவும்.

ஒன்றன்பால். வினா, சுட்டு இவற்றுடன் பொருந்தியும், பொருள் முதலாறனையும் பொருந்தியும், சுட்டிற்று ஆய்தத்தோடு பொருந்தியும் வருகின்ற துவ்விகுதிச் சொற்களும், ஒன்று எனும் எண்ணுப் பெயரும் ஒன்றன்பாற் சொற்களாம்.

(உதாரணம்.)

எது, யாது, அது, இது—வினா, சுட்டால் வருபவை.

குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது—பொருள் முதலாறால் வருபவை.

அஃது, இஃது, ஒன்று—சுட்டடுத்த ஆய்தப்பெயரும் எண்ணுப் பெயரும்..

பலவின்பால். மேல் ஒன்றன்பாலில் கூறிய வினா, சுட்டு, பொருள் முதலாறிலும் சம்பந்தப்பட்டவை வை, அ விகுதிகள் பெற்று வருவனவும், வகர ஒற்று இறுதிபெறும் சுட்டுப்பெயர்களும், கள் எனும் பகுதிப்பொருள் விகுதிபெற்று வருபெயர்களும், ஒன்றல்லா எண்ணுப்பெயர்களும், உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில எனும் குறிப்பு வினையாலணையும் பெயர்களும், பலவின்பாற் பெயர்களாம்.

(உ-ம்.) எவை, யாவை, அவை, இவை, நெடியவை, கரியவை, அவ், இவ், யானைகள், இரண்டு, மூன்று, உள்ள முதலியன.

இடம். இது தன்மை, முன்னிலை, படர்க்கை என முப்பிரிவானது.

தன்மை. பேசுபவன் தனைக்குறித்தே சொல்லல் தன்மையிடம்.

நான், யான், நாம், யாம், நம் சாரியை பெற்றுவரும் எல்லாம், தன்மை விகுதி பெற்ற வினையாலணையும் பெயர்கள், இவை தன்மையிடமாம்.

முன்னிலை. எவரிடம் பேசுவானோ அவரைப்பற்றிப் பேசுதல் முன்னிலையிடம்.

எல்லீர், நீவிர், நீயிர், நீர், நீ, முன்னிலை விகுதி பெற்றுவரும் வினையாலணையும் பெயர்கள், இவை முன்னிலையிடமாம்.

படர்க்கை. தன்மை, முன்னிலை யல்லனவாய் பேசப்படுபவை படர்க்கை இடத்தனவாம். (உ-ம்.) அவன், அவர்.

மேற்கூறிய தன்மை முன்னிலையுள் அடங்காதனவும் படர்க்கை விகுதிகள் பெற்றுவரும் வினையாலணையும்பெயர்களும், தொழிற்பெயர்களும் படர்க்கையிடமாம்.

இருதிணைக்கும் பொதுப்பெயர். முதற்பெயர் நான்கும், சினைப்பெயர் நான்கும், சினைமுதற்பெயர் நான்கும், முறைப்பெயரிரண்டும், தன்மைப்பெயர் நான்கும், முன்னிலைப்பெயர் ஐந்தும், எல்லாம், தாம், தான் முதலியனவும் இருதிணைக்கும் பொதுவாம்.

(உதாரணம்.)

சாத்தனிவன், சாத்தனிது சாத்தியிவள், சாத்தியிது கோதையிவள், கோதையிது கோதைகளிவர், கோதைகளிவை	முதற்பெயர்.
முடவனிவன், முடவனிது செவியிலியிவன், செவியிலியிது	சினைப்பெயர்.

முடக்கொற்றவன் இவன் முடக்கொற்றன் இது	} சினைமுதற்பெயர்.
தந்தையிவன், தந்தையிது	— முறைப்பெயர்.
யான் நம்பி, யான் பூதம்	— தன்மைப்பெயர்.
நீர் நம்பி, நீ பூதம்	— முன்னிலைப்பெயர்.

அவரெல்லாம், அவையெல்லாம்.

அவைதாம், அவர்தாம், அதுதான், அவன்தான்.

ஆண்பால், பெண்பால் முதலியவற்றுக்குரிய விகுதிகள் பெறும் உரிமையில்லாத அஃறிணைப்பெயர்கள் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய அஃறிணை இருபாலினும் வழங்கும்.

(உ-ம்.) யானை வந்தது, யானை வந்தன.

ஒன்று. இவ்வெண்ணுப் பெயரினடியாய் ஒருவன், ஒருத்தி என இருபாற்பெயர்களும் உண்டாம். ஏனை எண்ணுப் பெயர்களிற் பிறப்பன பலர்பாலே.

(உ-ம்.) ஒருவன் வந்தான், ஒருத்தி வந்தாள், இருவர் வந்தார்.

ஒன்று என்பது பன்மை விகுதி பெற்று ஒருவர் என வருவதுண்டு. அக்காலத்து ஆண்பாலிலேனும், பெண்பாலிலேனும் வழங்கும். அதன் வினை பன்மையாகவே யிருக்கும்.

(உ-ம்.) ஆடவருள் ஒருவர் வந்தார் ; பெண்டிருள் ஒருவர் வந்தார்.

ஆகுபெயர். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நால்வகை அளவை, சொல், தானி, கருவி, கருத்தா முதலியவற்றுள் யாதேனும் ஒன்றின்பெயர் அதற்குச் சம்பந்தப்பட்ட பிறிதொரு பொருளுக்குத் தொன்றுதொட்டே வழங்கி வருமாயின் அதனை ஆகுபெயரென்பர்.

(உதாரணம்.)

'தாமரைபுரையும் காமர்சேவடி'	—பொருளாகுபெயர்.	முழுமையின் பெயர் பாகத்திற்காயது.
ஊர் உறங்கிற்று	—இடவாகுபெயர்.	இடப்பெயர் அதனுள்ள பொருளுக்காயது.
கார் அறுத்தது	—காலவாகுபெயர்.	காலத்தின் பெயர் அக்காலத்துள்ள பயிருக்காயது.

வெற்றிலை நட்டான்	—சினையாகுபெயர்.	பாகத்தின்பெயர் முழுமைக்காயது.
நீலஞ் சூடினள்*	—குணவாகுபெயர்.	குணமாய நிறப்பெயர் அதனையுடைய பூவுக்காயது.
வற்றல் உண்டான்	—தொழிலாகுபெயர்.	வற்றலாகிய தொழில் அதனையுடைய பொருளுக்காயது.
கால் ஒடிந்தது	—எண்ணலளவையாகுபெயர்.	கால் எனும் எண்ணுப் பெயர் உடம்பின் கால்பாகமுள்ள உறுப்புக்காயது.
வீசை தந்தான்	—எடுத்தலளவையாகுபெயர்.	வீசையெனும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவுள்ள ஒரு பொருளுக்காயது.
நாழி உருண்டது	—முகத்தலளவையாகுபெயர்.	நாழியெனும் முகத்தலளவை அதனைக் குறிக்கும் பொருளுக்காயது.
முழம் தந்தான்	—நீட்டலளவையாகுபெயர்.	முழம் எனும் நீட்டலளவை அவ்வளவு கொண்ட பொருளுக்காயது.
உரை செய்தான்	—சொல்லாகுபெயர்.	உரையெனும் சொல்லின்பெயர் அவ்வுரையாகிய பொருளுக்காயது.
விளக்கு முரிந்தது	—தானியாகுபெயர்.	விளக்கு எனும் தீபம் அல்லது சுடரின் பெயர் அது இருக்கும் இடத்திற்காயது.
திருவாசகம் படித்தான்	—கருவியாகுபெயர்.	வாசகம் எனும் கருவிப் பெயர் அதாலாகிய நூலுக்காயது.

இந்நூலலங்காரம்	—காரியவாகுபெயர்.	அலங்காரம் எனும் காரியப்பெயர் அதனையுடையநூலுக்காயது
வள்ளுவர் படித்தான்	—கருத்தாவாகுபெயர்.	வள்ளுவர் எனும் கருத்தாப்பெயர் அவர் செய்த நூலுக்காயது.

காளைவந்தான் முதலிய உவமையாகுபெயரும் கொள்க.

இனி இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர், அடையடுத்தவாகுபெயரெனவும் உண்டு.

புளி முளைத்தது—புளியெனும் சுவைப்பெயர் அதனையுடைய பழத்துக்குக குணவாகுபெயராய்ப் பின் அப்பழத்தையுடைய மரத்துக்காயது இருமடியாகுபெயர்.

காரறுத்தது—கார் எனும் நிறப்பெயர் அந்நிறத்தையுடைய மேகத்திற்காய், அம்மேகத்தையுடைய காலத்துக்காய். அக்காலத்துண்டாம் பயிர்க்காயது மும்மடியாகுபெயர்.

வெற்றிலை, மருக்கொழுந்து—இலை, கொழுந்து இவற்றோடு வெறுமை, மரு எனும் சொற்கள் அடுத்துவந்து பொருள் குறித்தமையின் அடையடுத்தவாகுபெயர்.

வேற்றுமை. பெயர்களின் பொருளை வித்தியாசம் அல்லது வேற்றுமைப்படுத்துதற்கு வழங்கும் உருபுகளே வேற்றுமை எனப்படும்.

(உ-ம்.) மனிதனை அடித்தான், மனிதனால் அடியுண்டான்—இவற்றில் ஐயும் ஆலும் வந்து ஓரிடத்தில் செயப்படுபொருளாகவும் மற்றோரிடத்தில் கருத்தாவாகவும் பொருளை வேற்றுமைசெய்தன.

நீயிர், நீவிர், நான் எனும் முப்பெயர்கள் தவிர மற்றப்பெயர்களெல்லாம் வேற்றுமைப்படும்

வேற்றுமைகள். இயல்பாகவுள்ள பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என எட்டாம். இவை முதல், இரண்டு, மூன்று என்னும் எண்ணுப்பெயர்களான் அழைக்கப்பெறும்.

முதல்வேற்றுமை. பெயர் தோன்றியவாறே திரிபின்றி நிற்றலே முதல் வேற்றுமையாம். இதற்கு எழுவாய் வேற்றுமையெனவும் கர்த்தா, செய்பவன் எனவும் பெயருண்டு. இதற்குப் பயனிலையாக வருவன வினை, வினா, பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்கள்.

(உதாரணம்.)

அவன் வந்தான். (வினை.) அவன் வந்தவன். (வினையாலணையும்பெயர்.)
அவன் யாவன். (வினா) அது செய்கை. (தொழிற் பெயர்.)
அவன் அரசன். (பெயர்.)

அவன் நல்லன்.
அது நன்று. } —குறிப்பு வினைமுற்று.

கர்த்தா இருவகையாம்: ஏவுதற்கர்த்தா, இயற்றுதற்கர்த்தா.

ஏவுதற்கர்த்தா. தானாகச் செயலை செய்வதின்றாய் தன் ஏவு... வின்பேரிற் பிறர் செய்யுமாறு செய்வது.

(உ-ம்.) அரசன் கோவில் கட்டினான்—ஏவுதற்கர்த்தா.

இயற்றுதற்கர்த்தா. தானாகவே செய்வது.

(உ-ம்.) தச்சன் கோவில் கட்டினான்—இயற்றுதற்கர்த்தா.

முதல்வேற்றுமைக்கு உருபுபோல் வருவனவும் சில வுள அவையாவன:—

ஆனவன், ஆனவள், ஆனது, ஆனவர், ஆனவை.

என்பவன், என்பவள், என்பது, என்பவர், என்பவை.

(உ-ம்.) மனிதனானவன், ஜானகியென்பவள், குதிரையானது, வீ... ரானவர், மலர்களானவை.

இரண்டாம் வேற்றுமை. இதன் உருபு ஐ.

இதற்குரிய பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை. இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை யென... வும் வழங்கலாம்.

(உ-ம்.)	சோற்றைச் சமைத்தான்	—ஆக்கல்.
	வீட்டை யிடித்தான்	—அழித்தல்.
	பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தான்	—அடைதல்.
	பள்ளிக்கூடத்தை விட்டான்	—நீத்தல்.
	வீரனையொத்தான்	—ஒத்தல்.
	பொன்னையுடையான்	—உடைமை.

இவ்வேற்றுமைச் சொற்களையடுத்து வருவன வினைமுற்று... களும், எச்சங்களும், தொழிற்பெயர்களும், வினையாலணையு... பெயர்களுமேயாம்.

(உ-ம்.)	வீட்டை யிடித்தான்	—வினைமுற்று.
	வீட்டை யிடித்த மனிதன்	—பெயரெச்சம்.
	வீட்டை யிடித்து வந்தான்	—வினையெச்சம்.

வீட்டை பிடித்தல்	—தொழிற்பெயர்.
வீட்டை பிடித்தவன்	—வினையாலணையும்பெயர்.

மூன்றாம் வேற்றுமை. ஆல், ஆன், ஒடு, ஓடு இவை உருபுகளாம்.

இதன் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி.

(உ-ம்.)	வாளால் வெட்டினான்	—கருவி.
	அவனால் செய்யப்பட்டது	—கருத்தா.
	அவனொடு போனான்	—உடனிகழ்ச்சி.

கருவி. ஏதேனும் ஒரு பொருளைச் செய்தற்கு சாதனமாயிருப்பது.

இது முதற்கருவி, துணைக்கருவி என இரு பிரிவானது.

முதற்கருவி. காரியத்தோடு ஒற்றுமையுடைத்தாய்க் கருமம் முடிந்தபின்னரும் நீங்காது பெரும்பாலும் செய்யப்பட்ட பொருளாய் மாறுவது.

(உ-ம்.) நூலால் வஸ்திரம் நெய்தான்.

துணைக்கருவி. கருமம் முடிந்தவுடன் செய்யப்பட்ட காரியத்தினின்றும் நீங்கிவிடுவது.

(உ-ம்.) ஓடத்தால் வஸ்திரம் நெய்தான்.

கருத்தா. முதல் வேற்றுமையிற்போல ஏவுதற் கர்த்தா, இயற்றுதற் கர்த்தா என இரு பிரிவு. [இவற்றின் தெளிவை முதல் வேற்றுமையிற் கீழ்க்காண்க.]

(உ-ம்.) அரசனால் கட்டப்பட்ட கோவில்—ஏவுதற் கர்த்தா.
தச்சனால் கட்டப்பட்ட கோவில்—இயற்றுதற் கர்த்தா.

உடனிகழ்ச்சி. ஒன்று நடக்கும்போது அதனொடு பிறிதொன்று ஒத்து நடக்குமேல் அது உடனிகழ்ச்சியாம். ஒடு உருபு உடனிகழ்ச்சியில் வழங்கும்.

(உ-ம்.) அரசன் சென்றான். அதே சமயம் அரசனுக்குத் துணையாய்ச் சேவகரும் சென்றார். அப்பொழுது அரசனொடு சேவகர் சென்றார் என ஒடு உடனிகழ்ச்சியில் வந்தது.

ஒடு உருபு இரண்டில் விசேஷித்ததோடு சேரும்.

சேவகரை விசேஷித்துக் கூறினாலன்றி சேவகரோடு அரசன்சென்றான் என்பது இழுக்காம். மற்று அரசனொடு சேவகர்சென்றார் என்பதே நியாயம்.

ஆல், ஆன் உருபுகள் கருவி, கருத்தாப் பொருட்களிலும் ஒடு, ஓடு என்பன உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும். சிலவேளைகளில் இவை மாறி வருவதுமுண்டு.

(உ-ம்.) 'தூங்குகையாலோங்குநடைய' —ஆல்உருபு உடனிகழ்ச்சியில்.
'கொடியொடு துவக்குண்டான்'—ஒடு கருத்தா.
'ஊசியொடு குயின்றதூசு' —ஒடு கருவி.

மூன்றாம் வேற்றுமைக் கர்த்தாவுக்குப் பின் செயப்பாட்டு வினை வரும்.

(உ-ம்.) கோவில் அரசனால் கட்டப்பட்டது.

மூன்றாம் வேற்றுமைச் சொற்களுக்குப்பின் வினைமுற்றும், ஈரெச்சங்களும், தொழிற்பெயர்களும், வினையாலணையும்பெயர்களும் வரும்.

(உ-ம்.) வாளால் வெட்டினான் —வினைமுற்று.
வாளால் வெட்டின மனிதன் —பெயரெச்சம்.
வாளால் வெட்டி வீழ்த்தினான் —வினையெச்சம்.
வாளால் வெட்டுதல் —தொழிற்பெயர்.
வாளால் வெட்டினவன் —வினையாலணையும்பெயர்.

ஆல், ஆன் என்பவற்றுக்குப் பதிலாய் கொண்டு என்பதும் ஓடு, ஒடு என்பவற்றுக்குப் பதிலாய் உடன் என்பதும் சொல்லுருபுகளாக வழங்கும்.

(உ-ம்.) வாளால் வெட்டினான் —வாள்கொண்டு வெட்டினான்
அரசனொடு போனான் —அரசனுடன் போனான்.

நான்காம் வேற்றுமை. இதன் உருபு கு.

இதன் சிறந்த பொருள் கொடை. மற்றும் பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்பவையும் உண்டு.

(உதாரணம்.)

தரித்திரர்க்குக் கொடுத்தான் —கொடை.
இராமனுக்கு விரோதி இராவணன் —பகை.
இராமனுக்குத் தோழன் அனுமான் —நேர்ச்சி.
கொடியனுக்கு ஏற்றது தண்டம் —தகுதி.
வஸ்திரத்துக்கு நூல் —அதுவாதல் [முதற்காரணம்].
கூலிக்கு வேலைசெய்தான்" —பொருட்டு [நிமித்தகாரணம்].
இராமனுக்குத் தம்பி லக்குமணன் —முறை.

இவ்வேற்றுமைச் சொற்களுக்குப் பின் பெயர்ச்சொற்களும் செய்வினை, செயப்பாட்டுவினை இருவகைகளும் அவற்றினடியாய்ப் பிறந்தவெல்லாம் வரும்.

(உ-ம்.) இராமனுக்குக் கொடுத்தான் —வினைமுற்று.
அவனுக்குக் கொடுத்த பையன் —பெயரெச்சம்.
அவனுக்குக் கொடுத்து உதவினான்—வினையெச்சம்.
அவனுக்குக் கொடுத்தல் —தொழிற்பெயர்.
அவனுக்குக் கொடுத்தவன் —வினையாலணையும்பெயர்.
அவனுக்குக் கொடுக்கப்பட்டது —செயப்பாட்டுவினை.
கடுக்கனுக்குப் பொன் —பெயர்.

பொருட்டு, நிமித்தம் என்பவையும் குவ்வோடு சேர்ந்த ஆக வென்பதும் சொல்லுருபுகளாக வரும்.

(உ-ம்.) கூலியின்பொருட்டு வேலைசெய்தான்.
கூலிக்காக வேலைசெய்தான்.

ஐந்தாம் வேற்றுமை. இன், இல் இரண்டும் இதன் உருபுகள்.

இதன் பொருள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது.

இவ்வேற்றுமைச் சொற்கள் எல்லைப்பொருளானால் பெயர்ச்சொல்லுக்கு முன்னும், மற்றப்பொருட்களில் தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுகள், எச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களுக்கு முன்னும் வரும்.

(உதாரணம்.)

மலையின் வீழருவி —நீக்கப்பொருள் [பெயரெச்சம்].
வைகையிற் பெரிது கங்கை —ஒப்புப்பொருள் [வினையாலணையும்பெயர்].
ஊரின் வடக்கு காளிகோவில் —எல்லைப்பொருள் [பெயர்ச்சொல்].
பலத்தில் மிகுந்தான் பீமன் —ஏதுப்பொருள் [வினைமுற்று].

நின்று, இருந்து என்பவை தாமாகவேனும் உம் ஏற்றேனும் இல், இன் என்பவற்றுக்குப் பதிலாய் சொல்லுருபுகளாக வழங்கும்.

(உ-ம்.) மலைநின்று வீழ்ந்தது.
மலைநின்றும் வீழ்ந்தது.

ஆறாம் வேற்றுமை. உருபுகள் அது (ஒருமை), அ (பன்மை).

இதன் பொருள் கிழமை.

இவ்வேற்றுமைச் சொற்கள் பொருள், இடம், காலம் என்பவற்றில் பிறிதின்கிழமையாயும் சினை, குணம், தொழில் ஒன்றன்

கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம் இவற்றில் தற்கிழமையாயும் பெயர், தொழிற்பெயர் இவற்றின்முன் வரும்.

தற்கிழமை—தன்னோடு ஒன்றாயிருத்தல், அல்லது தனக்குரியது.

பிறிதின்கிழமை—தன்னின் வேறாயது, அல்லது வேறொன்றற்குரியது.

(உதாரணம்.)

கைவிரல் —தற்கிழமை.

கைமோதிரம் —பிறிதின்கிழமை.

சாத்தனது பசு	—பொருட்பிறிதின்கிழமை	[பெயர்முன்]
சாத்தனது வீடு	—இடப்பிறிதின்கிழமை	[பெயர்முன்].
சாத்தனது நாள்	—காலப்பிறிதின்கிழமை	[பெயர்முன்].
சாத்தனது கை	—சினைத்தற்கிழமை	[பெயர்முன்].
சாத்தனது கருமை	—பண்புத்தற்கிழமை	[பெயர்முன்]
சாத்தனது செய்கை	—தொழில்தற்கிழமை	[தொழிற்பெயர்முன்].
நெல்லினது குப்பை	—ஒன்றன்கூட்டத்தற்கிழமை	[பெயர்முன்].
பறவைகளது கூட்டம்	—பலவினீட்டத்தற்கிழமை	[தொழிற்பெயர்முன்].
நெல்லினது பொரி	—திரிபினாக்கத்தற்கிழமை	[தொழிற்பெயர்முன்].

உடைய என்பது இவ்வேற்றுமைக்குச் சொல்லுருபாய் வரும்.

(உ-ம்.) சாத்தனுடைய கை.

ஏழாம் வேற்றுமை. உருபு கண் முதலியன.

பொருள் முதல் ஆறும் தற்கிழமை பிறிதின்கிழமைப் பொருள்களில் பெயர், தெரிநிலைவினை, குறிப்புவினை, தொழிற்பெயர், எச்சம், வினையாலணையும்பெயர் முதலியவற்றின்முன் இடப்பொருளில் வரும்.

(உதாரணம்.)

மணியின்கண் ஒளி—தற்கிழமை பனையின்கண் அன்றில்—பிறிதின்கிழமை	பொருள் இடமாயிற்று.
ஊரின்கண் வீடு—தற்கிழமை ஆகாயத்தின்கண் பறவை—பிறிதின்கிழமை	இடம் இடமாயிற்று.

நாளின்கண் நாழிகை—தற்கிழமை வேனிலின்கட் பாதிரி—பிறிதின்கிழமை	காலம் இடமாயிற்று.
கையின்கண் விரல்—தற்கிழமை கையின்கட் கடகம்—பிறிதின்கிழமை	சினை இடமாயிற்று.
கறுப்பின்கண் அழகு—தற்கிழமை இளமையின்கட் செல்வம்—பிறிதின்கிழமை	குணம் இடமாயிற்று.
ஆடற்கண் சதி—தற்கிழமை ஆடற்கட் பாட்டு—பிறிதின்கிழமை	தொழில் இடமாயிற்று.

இவ்வேற்றுமைச் சொற்களுக்குப் பின் வருவன :

(உ-ம்.) நீரின்கட் குதித்தான் —வினை.
காதின்கண் குழை —பெயர்.
நீரின்கட் குதித்தல் —தொழிற்பெயர்.
நீரின்கட் குதித்தபையன் —பெயரெச்சம்.
நீரின்கட் குதித்தெழுந்தான் —வினையெச்சம்.
நீரின்கட் குதித்தவன் —வினையாலணையும்பெயர்.

இவ்வேற்றுமைக்கு கண் தவிர, பிற உருபுகளும் வழங்கும். அவை வருமாறு: கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல்.

இவ்வுருபுகள் எல்லாம் வேற்றுமைக்கு வருதலுமன்றி தாமாய் நின்று இடத்தை உணர்த்துவதுமுண்டு.

(உ-ம்.) கண்ணகல் ஞாலம், தென்றிசை, கடைச்சங்கம், இடைச்சங்கம், தலைச்சங்கம் முதலியன.

எட்டாம் வேற்றுமை, அல்லது விளி வேற்றுமை.

அண்மைக்கண் அல்லது சேய்மைக்கண் நின்றோரை அழைக்க அல்லது விளிக்க வழங்குதலின் விளிவேற்றுமை யெனப்பெயர் பெற்றது.

உருபுகள்: பெயரின் ஈறுதிரிதல், ஈறுகுன்றல், ஈறுமிகுதல், இயல்பாதல், ஈற்று அயல்திரிதல்.

பொருள், படர்க்கையோரைத் தன் முகமாக அழைத்தல்.

ஈற்றிலுள்ள இகரம் ஈகாரமாய் நீளும்.

(உ-ம்) நம்பி, தோழி ; நம்பீ, தோழீ. [ஈறு திரிபு.]

ஐகாரம் ஆயெனத்திரியும். (உ-ம்.) நங்கை, நங்காய். [ஈறுதிரிபு.]

ஈற்றிலுள்ள உகர, ஓகாரங்கள் ஏகாரம் ஏற்கும்.

(உ-ம்.) வேந்து, வேந்தே ; கோ, கோவே. [ஈறு மிகுதல்.]

அண்மை விழி இயல்பாகும். (உ-ம்.) நம்பி, நம்பி. [ஈறுஇயல்பு.]

னகரவீற்றுச் சொற்கள் ஈறு கெடும்.

(உ-ம்.) அரசன், அரச ; நண்பன், நண்ப. [ஈறுகுன்றல்.]

ஆன் ஈறு இயல்பாகும் (உ-ம்.) சேரமான், சேரமான்.

னகர, ளகரவீற்று முறைப்பெயர்கள் ஏகாரம் ஏற்கும்.

(உ-ம்.) மகன், மகனே ; மகள், மகளே. [ஈறு மிகுதல்.]

லகர, ளகர வீற்று உயர்திணைப்பெயர்கள் ஈற்றயல் நீளும்.

(உ-ம்.) குரிசில், மக்கள்; குரிசீல், மக்காள். [ஈற்றயல் திரிபு.]

அஃறிணைப்பெயர் விளியேற்க வரின் ஈற்றயல் நீண்டேனும் ஏகார மேற்றேனும் வரும்.

(உ-ம்.) மரம், மரமே ; அணில், அணிலே ; கூந்தல், கூந்தால். [ஈறு மிகுதலும், ஈற்றயல் திரிபும்.]

விளிவேற்றுமைக்குப் பின் முன்னிலை, ஏவல், வியங்கோள் வினைமுற்றுகள் வரும். (உ-ம்.) நண்பகூறினை [முன்னிலை]; நண்ப சேர் [ஏவல்]; நண்ப தருக [வியங்கோள்].

உருபுமயக்கம். ஒரு வேற்றுமைக்குப் பதிலாய் வேறு வேற்றுமைகளும் வழங்கலுண்டு.

உயிர்திணை ஆறும் வேற்றுமைத்தொகையை விரிக்க நான்காம் வேற்றுமையின் கு வருதலுமுண்டு.

(உ-ம்.) நம்பி மகன்—ஆறும் வேற்றுமைத்தொகை.
நம்பிக்கு மகன்—நான்காம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

இரண்டும் ஏழும் மயங்குதலுமுண்டு.

(உ-ம்.) அரசனைச் சார்ந்தான், அரசன்கண் சார்ந்தான்.

மூன்றும் ஐந்தும் ஏதுப்பொருளில் வரும்

(உ-ம்.) வாணிகத்தானாயினான், வாணிகத்தினாயினான்.
வாணிகத்தானாயபொருள், வாணிகத்தினாயபொருள்.

சொற்களில் எவ்வேற்றுமை உருபை வைத்துச் சொல்லினும் அவை எவ்வேற்றுமைப் பொருளில் வழங்குகின்றதோ அவ்வேற்றுமையெனவே மதிக்கப்படும்.

(உ-ம்.) காலத்தினாற் செய்த நன்றி.—இவ்விடத்தில் வந்த மூன்றனுருபு அதற்குரிய கருவிப்பொருள், கருத்தாப்பொருளில் வராது இடப்பொருளில் வந்தமையின் ஆல் உருபைக் கண் உருபாக மாற்றுக.

'கிழங்கு மணற்கீன்ற முளை'—இதிலுள்ள குவ்வுருபு இடப்பொருளில் வந்தமையால் அதனைக் கண்ணுருபாகத் திரிக்க.

நு, ம, வ, யா, அ, இ, உ இவற்றையடுத்து ன, ள, ர, வை, து என்பவற்றை ஏற்றுமுடிந்ததாய் வரும் பெயர்களும் தாம், தான் இவையிரண்டும் விளிக்கப்படா.

(உ-ம்.) நுமன், நுமள், நுமர், எவன், எவள், எவர், எவை, எது முதலியன.

வினைச்சொல்லும் வினையின் பிரிவுகளும்.

(Verbs: Different Forms of Verbs.)

[வினையெனினும் தொழிலெனினும் ஒக்கும்.]

வினைச்சொல்லாவது ஒரு பெயரினுடைய வினை அல்லது தொழிலைக் காட்டுவதேயாம். வினைச்சொல்லானது வேற்றுமையொடு பொருந்தாது காலத்தொடு புலப்படும்.

வினை தெரிநிலைவினை, குறிப்புவினை யென இருபிரிவாம்.

தெரிநிலைவினையாவது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறையேனும் செயப்படுபொருள் தவிர்ந்த ஐந்தையேனும் காட்டி நிற்பதாம். காலந் தெரிய நின்றமையின் தெரிநிலைவினை யெனப் பெயர் பெற்றது.

(உ-ம்.) மரத்தை வெட்டினான்—இதில் வெட்டினான் எனும் வினைச்சொல்,

செய்பவனாகிய	அவன்,
வெட்டுதற்கருவியாகிய	கோடரி,
வெட்டுநிலமாகிய	மரம் நின்ற இடம்,
செயலாகிய	வெட்டுதல்,
காலமாகிய	இறப்பு,

[படை.

செயப்படுபொருளாகிய மரம், இவற்றைப் பயந்துநிற்றல் வெளிப்

ஓடினான், நடந்தான் என்பவற்றில், செயப்படுபொருள் தவிர்ந்த மற்றவை காணப்படுதல் காண்க

. . தெரிநிலைவினையில் பலபிரிவுகளுள. அவை செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என ஆறாம்.

செய்வினை. தானே செய்தல் செய்வினையாம்.

(உ-ம்.) அவன் வெட்டினான்.—இங்கு வெட்டுதலாகிய தொழில் அவனுடையது.

செயப்பாட்டுவினை. ஒருவன்மாட்டுப் பிறனொருவனால் செய்யப்படுவது செயப்பாட்டு வினையாம். செயப்படுபொருள் குன்றாவினையே செயப்பாட்டுவினையாக வரும்.

(உ-ம்.) அவன் அடிக்கப்பட்டான்.—இங்கு அடித்தலாகிய தொழில் அவனுடையதன்று, ஆனால் பிறனொருவனால் அவனுக்குச் செய்யப்பட்டது.

'படு' என்பது பெரும்பாலும் இவ்வினையைக் காட்டி நிற்கும்.

தன்வினை. தானே செய்தல் தன்வினையாம்.

(உ-ம்.) அவன் கட்டினான்.—இங்கு கட்டுதலாகிய தொழில் அவனது.

பிறவினை. ஒரு செயலைப் பிறர் செய்யுமாறு செய்தல்.

(உ-ம்.) அவன் கட்டுவித்தான்.—இங்கு கட்டுதலாகிய தொழில் பிறனொருவனுடையது. பிறன் கட்டுமாறு செய்தவன் அவன்.

பிறவினையைக் காட்ட வருவது வி, பி இரண்டும். சில வேளைகளில் து, சு முதலியவையும் வரும்.

(உ-ம்.) செய்—செய்வி. பாய்—பாய்ச்சு.
நட—நடப்பி. போர்—போர்த்து.

செயப்படுபொருள் குன்றியவினை. எதை, யாரை எனும் வினாச் சொற்களைச் சேர்த்துக்கூறி விடை பெறா வினைகள் செயப்படுபொருள் குன்றியவினையாம்.

(உ-ம்.) அவன் நடந்தான்—எதை நடந்தான் எனக்கேள்வி வராதாதலின் நடந்தான் என்பது செயப்படுபொருள் குன்றியவினையாம்.

செயப்படுபொருள் குன்றாவினை. மேற்கூறிய கேள்விக்கு விடை பெறுபவை செயப்படுபொருள் குன்றாவினையாம்.

(உ-ம்.) அவன் வெட்டினான்—எதை வெட்டினான்? மரத்தை எனவே, வெட்டினான் செயப்படுபொருள் குன்றாவினை.

குறிப்புவினை. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்றினடியாய்ப் பிறந்து செய்பவன் அல்லது கருத்தாவொன்றனை மாத்திரம் காட்டி நிற்பதாம். இதில் காலத்தை முன் பின் வார்த்தைகளின் சம்பந்தத்தால் குறிப்பாய் அறியக்கிடந்தமையின் குறிப்புவினை யெனப்பட்டது. இவை பெரும்பாலும் குணம் அல்லது பண்பினடியாய்ப் பிறப்பன.

(உ-ம்.) குழையன்—பொருள். மூக்கன்—சினை.
வெற்பன்—இடம். நல்லன்—குணம்.
காலையான்—காலம். கொல்லன்—தொழில்.

இவன் முற்காலத்தில் வெற்பன்.—இதில் முற்காலத்தில் என்றமையின் இறந்தகாலம்.

வினைச்சொற்களிலுள்ள முக்கிய உறுப்புக்கள் மூன்று.

அவை பகுதி, இடைநிலை, விகுதியாம்.

பகுதி. தெரிநிலைவினையினுள் வினைச்சொல்லின் முதலிலுள்ள பகாப்பதமாகிய ஏவலும் குறிப்புவினையில் பொருள்முதல் ஆறின் ஒன்றைச்சார்ந்த பகாப்பதமாகிய பெயர்களுமாம்.

அவை தெரிநிலைவினையில் நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று மொழிக்கு ஈற்றில் வரும் உயிர், மெய்களை ஈற்றிலுடைய சொற்களும் அவற்றைப் போல முடியும் பிற ஏவல்களுமாம்.

குறிப்புவினையில் பொருள், இடம், காலம், சினை, தொழில் இவற்றின் பெயர்களும், செம்மை, சிறுமை, மென்மை, மேன்மை முதலிய பண்புப்பெயர்களுமாம்.

(உதாரணம்.)

கடந்தான்.—இதில் நட என்பதைப்போன்ற கட என்னும் ஏவல் பகுதி.

கரியன்.—இதில் கருமை என்ற பண்புப்பெயர் பகுதியாம்.

ஓர் வினைச்சொல்லின் பகுதியிலிருந்து அவ்வினை தன்வினை, பிறவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை, செய்வினை, செயப்பாட்டுவினை இவற்றில் எப்பிரிவைச் சார்ந்ததென அறியலாம்.

(உதாரணம்.)

சொல்.	பகுதி.	வினை.
செய்தான்	... செய்	... தன்வினை.
செய்வித்தான்	... செய்வி	... பிறவினை.
அடித்தான்	... அடி	... செயப்படுபொருள் குன்றாவினை.
ஓடினான்	... ஓடு	... செயப்படுபொருள்குன்றியவினை.
கொடுத்தான்	... கொடு	... செய்வினை.
கொடுக்கப்பட்டான்	... கொடுக்கப்படு	... செயப்பாட்டுவினை.

விகுதி. வினையின் ஈற்றிலிருப்பது விகுதியாம்.

விகுதி ஒரு வினையினுடைய இடத்துக்கு ஏற்ப வித்தியாசமானவை வழங்கும்.

தன்மையிடம்: ஒருமை—என், ஏன், கு, டு, து, று, அல், அன்.
பன்மை—ஓம், அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும்.

முன்னிலையிடம்: ஒருமை—ஐ, ஆய், இ.
பன்மை—இர், ஈர், மின்.

படர்க்கையிடம்: ஆண்பால்—அன், ஆன்,
பெண்பால்—அள், ஆள்.
பலர்பால்—அர், ஆர், ப, மார்.
ஒன்றன்பால்—து, று, டு.
பலவின்பால்—அ, ஆ.

ஓர் வினைமுற்றின் திணை, பால், இடங்களை யறிவது அதன் விகுதியினால்.

இடைநிலை. வினைச்சொல்லில் பகுதி, விகுதிகட்கிடையே வருவது இடைநிலையாம்.

இடைநிலை, வினையின் காலத்திற்கேற்ப வித்தியாசமானவைகள் வழங்கும்.

நிகழ்காலம். ஆநின்று, கின்று, கிறு.

(உ-ம்.) வாநின்றான், வருகின்றான், வருகிறான்.

இறந்தகாலம். த், ட், ற், இன்.

(உ-ம்.) கொடுத்தான், கண்டான், சென்றான், வெட்டினான்.

இவற்றுள் இன் என்னும் இடைநிலை இன் என நின்றும், இ கெட்டு 'ன்' நின்றும், ன் கெட்டு 'இ' நின்றும், காலங்காட்டி இடைநிலையாகும்.

(உ-ம்) சொல்லினான் —இன்.
சொன்னான் —ன்
சொல்லிய —இ

எதிர்காலம். ப், வ். (உ-ம்) நடப்பான், சொல்வான்.

இடைநிலையின் மூலமாய் வினைச்சொல்லின் காலத்தை அறியலாம்.

இடைநிலைகள் காலங்காட்டுவதன்றி வினையிலுள்ள மற்ற உறுப்புகளும் ஓரோவிடங்களில் காலங்காட்டும்.

பகுதி காலங்காட்டல். பெரும்பாலும் தனிக்குறிலடுத்த வல்லெழுத்தின்மேல் உகரமேறிப் பகுதியாய்வரின் அவ்வுகரமேறிய வல்லொற்றிரட்டி இறந்தகாலங் காட்டும்.

(உ-ம்.) நடு—நட்டான்; சுடு—சுட்டான்.

போடு எனும் நெட்டெழுத்தையடுத்த ஒரு சொல்லும் இவ்விதியை யனுசரியாது. (உ-ம்.) போடு—போட்டான்.

ஓரோ விடங்களில் விகுதியும் காலங்காட்டும்.

ஆ என்னும் எதிர்மறையுருபு முக்காலங்களினும் வரும்.

மற்று விகுதிகள் காலங்காட்டுவது அடியில் வருமாறு:—

நிகழ்காலம் காட்டுவது:—செய்யும் என்னும் முற்றும், எதிர் மறையும்.

(உ-ம்.) இங்கிலிஷத்தில் புகைரதம் மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் ஓடும். யான் செல்லேன்.

இறந்தகாலம் காட்டுவன:—று, றும்; து, தும்; டு, டும்; ப, ஆ.

(உ-ம்.)	யான் சென்று,	யாம் சென்றும்	இவை இறந்தகாலம்.
	யான் வந்து,	யாம் வந்தும்	
	யான் உண்டு,	யாம் உண்டும்	
	அவர் உண்ப,	அவை உண்ணு	

எதிர்காலம் காட்டுவன:—று, றும்; து, தும்; கு, கும்; இ, மார், ப, மின், ஏவல், வியங்கோள் முற்று, செய்யும், ஆ.

(உ-ம்.)	யான் சேறு,	யாம் சேறும்	இவை எதிர்காலம்.
	யான் வருது,	யாம் வருதும்	
	யான் உண்கு,	யாம் உண்கும்	
	நீ சேறி,	அவர் உண்மார்	
	அவர் உண்ப, நீர் உண்மின், உண்ணீர்		
	வாழ்க, வாழிய, வாழியர் (வியங்கோள்)		
	அவை சேரும். (செய்யும்)		
	அவர் சேரார் (எதிர்மறை)		

வினையின் பிரிவுகள். வினைமுற்று. வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும்பெயர்.

வினைமுற்று. தெரிநிலையாயின் செய்பவன் முதலிய ஆறையும் அல்லது செயப்படுபொருள் தவிர்ந்த ஐந்தையுங்காட்டி, குறிப்பாயின் பொருள்முதலாறினொன்றினடியாய்ப் பிறந்து, பொருள் முதல் ஆறில் ஒன்றைத் தமக்கு எழுவாயாக ஏற்பன வினைமுற்றுகளாம்.

(உ-ம்.) அவன் மரத்தை வெட்டினான் —தெரிநிலை.
அரசன் நல்லன் —குறிப்பு.

மேல் விகுதிகளிற்கூறிய தன்மையொருமை விகுதிகள்பெற்று வருவன தன்மையொருமை வினைமுற்றுகளாம்.

(உ-ம்.) யான் நின்றனென்; நிற்பேன்; நிற்பல்; நிற்பன்; உண்கு; உண்டு; வந்து; சேறு.—இவை தன்மையொருமை வினைமுற்றுகள்.

தன்மைப் பன்மை விகுதிகள் பெற்று வருவன தன்மைப் பன்மை வினை முற்றுகளாம்.

(உ-ம்.) யாம் நின்றனம்; நிற்பாம்; நிற்பெம்; நிற்பேம்; நிற்போம்; உண்கும்; உண்டும்; வந்தும்; சேறும்.—தன்மைப்பன்மை வினைமுற்றுகள்.

இவை வழங்குமாறு: அம், ஆம் இருவிகுதியும் தன்மையும் முன்னிலையும் ஒருங்கு வழங்கும்போதும், எம், ஏம், ஓம் தன்மையும் படர்க்கையும் வழங்கும்போதும், மற்ற விகுதிகள் தன்மை, முன்னிலை, படர்க்கை மூன்றும் வழங்கும்போதும் உபயோகப்படும்.

(உ-ம்.) வருவம் —நானும் நீயும் வருவம்.
வருவோம் —நானும் அவனும் வருவோம்.
வருதும் —யான், நீ, அவன் (மூவரும்) வருதும்.

குறிப்புத்தன்மை வினைமுற்றில் இவ்விகுதிகள் எல்லாம் வருவன வல்ல.

(உ-ம்.) யான் நல்லன், யாம் நல்லம் —இவ்வுதாரணங்களில் அன், அம் என்பவை தன்மை யொருமை, பன்மைகளில் விகுதிகளாய் வந்தன. மற்ற விகுதிகள் வந்தவிடங் கண்டுகொள்க. கு, டு, து, று, கும், டும், தும், றும், இவ்விகுதிகள் தன்மைக்குறிப்பில் வரா.

முன்னிலை ஒருமை விகுதி பெறுவன முன்னிலை யொருமை வினை முற்றுகளாம். (உ-ம்.) வருதி, வந்தனை, வந்தாய்.

முன்னிலைப் பன்மை விகுதிகள் பெறுவன முன்னிலைப்பன்மை வினைமுற்றுகளாம். (உ-ம்.) சென்மின், சென்றனிர், சென்றீர்.

குறிப்பு முன்னிலை வினை முற்றுகளும் இவ்விகுதிகள் பெறும்.

(உ-ம்.) நல்லை, நல்லாய் —ஒருமை.
நல்லிர், நல்லீர் —பன்மை.

படர்க்கை வினைமுற்றுகள் :—

ஆண்பால் விகுதி பெறுவன ஆண்பால் வினைமுற்று.

(உ-ம்.) வந்தனன், வந்தான் —தெரிநிலை.
நல்லன், நல்லான் —குறிப்பு.

பெண்பால் விகுதி பெறுவன பெண்பால் படர்க்கை வினை முற்றுகள்

(உ-ம்.) வந்தனள், வந்தாள் —தெரிநிலை.
பொன்னினள், குணத்தினள் —குறிப்பு.

பலர்பால் விகுதி பெறுவன பலர்பால் வினைமுற்றுகள்.

(உ-ம்.) வந்தனர், வந்தார், வருப, சென்மார் — தெரிநிலை.
குணத்தர், குணத்தார் — குறிப்பு.

ஒன்றன்பால் விகுதி பெறுவன ஒன்றன்பால் வினைமுற்று.

(உ-ம்.) வந்தது, கூயிற்று — தெரிநிலை.
அணித்து, அற்று, பொருட்டு — குறிப்பு.

பலவின்பால் விகுதி பெறுவன பலவின்பால் வினைமுற்றுகளாம்.

(உ-ம்.) வந்தன, வரா —தெரிநிலை. [ஆகாரம் எதிர்மறையிற்றான் வரும்.]
(அவை) நல்ல —குறிப்பு.

வியங்கோள் விகுதி பெறுவன வியங்கோள் முற்றும்.

வியங்கோளானது வாழ்த்துதல், வேண்டிக்கொள்ளுதல் முதலிய பொருட்களில் வழங்கும்.

(உ-ம்.) வாழ்க, பெருக —வாழ்த்துப்பொருள்.
தருக, ஆதரிக்க —வேண்டிக்கோடற்பொருள்.

மேற்கூறிய வினைமுற்றுகளுள்,

இருதிணைக்கும் பொதுவாய் வருவன தன்மை, முன்னிலை, வியங்கோள் வினைமுற்றுகளாம்.

வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுகளும் மூவிடங்களிலும் ஐம்பாலிலும் வழங்கும்.

(உ-ம்.) யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை—இல்லை.

யார் எனும் வினாக்குறிப்பு வினைமுற்று படர்க்கை உயர்திணை முப்பாலிலும் வழங்கும். (உ-ம்.) அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

எவன் எனும் வினாக்குறிப்பு வினைமுற்று படர்க்கை அஃறிணை இருபாலிலும் வழங்கும். (உ-ம்.) அது எவன்? அவை எவன்?

எவன் எனும்சொல் இடைகுறைந்தும், குறைந்ததோடு அகர, ஐகாரங்கள் பெற்றும் இன்னும் பலவாறாகவும் வரும்.

(உ-ம்.) அஃதென், அஃதென்னை, அஃதென்ன முதலியன.

எதிர்மறை வினைமுற்றுகள். ஆகாரம் எதிர்மறையைக் காட்டும் இடைநிலை. பகுதியோடு இடையில் வேறு யாதும் சோராது விகுதி சேர்ந்தும் எதிர்மறை முற்றாகும்.

(உ-ம்.) சொல் + ஆன் = சொல்லான் —(படர்க்கை).
உரை + ஈர் = உரையீர் —(முன்னிலை).
சொல் + ஏன் = சொல்லேன் —(தன்மை).

இவ்விடங்களில் எதிர்மறை யிடைநிலையாகிய ஆகாரம் இடை யிற்புணர்ந்து கெட்டதெனவும் கூறுவர்.

து விகுதிமுன் ஆகாரம் எதிர்மறையாகத் தோன்றும்.

(உ-ம்.) செல்+ஆ+து=செல்லாது.

பலவின்பாலில் ஆகாரமே எதிர்மறைகாட்டும் விகுதியாம்.

(உ-ம்.) அவை செல்லா: செல்+ஆ.

தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாகியும், குறிப்புமுற்று குறிப்புப் பெயரெச்ச, வினையெச்சங்களாகியும் வழங்கும்.

(உதாரணம்.)

'நண்ணினள் நயந்தாள்.'—இது நண்ணி நயந்தாளெனத் தெரிநிலை முற்று வினையெச்சமாயது.

'வினை வேட்கையீர் வீரர் வம்மின்.'—குறிப்பு முற்று பெயரெச்ச மாயது.

'உச்சிக்கூப்பிய கையினர் தீற்புகழ்ந்து.'—குறிப்பு முற்று வினையெச்ச மாயது.

மேற்கூறிய முற்று, எச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களுள் ஒருபதம் ஒன்றுக்குரித்தாவதன்றி இரண்டு, மூன்றுக் குப் பொதுவாகவும் வரும்.

(உதாரணம்.)

ஓடிய குதிரை —ஒரேபதம் பெயரெச்சமாகவும்,
ஓடிய வந்தான் —வினையெச்சமாகவும் வந்தது.
படிப்பான் வந்தான் —படித்தவன் வந்தான் என வினையாலணையும்
அவன் படிப்பான் வருவான் —வினையெச்சம். [பெயர்.
அவன் படிப்பான் —வினைமுற்று.

மற்றும் இவைபோல்வன வந்தவிடங் கண்டுகொள்க.

பெயரேச்சம். செய்த, செய்கின்ற, செய்யும் என்பவற்றை யொத்து, காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டித் திணை, பால், இடங்களைக் காட்டாதனவாய், செய்பவன் முதலிய ஆறில் ஏதேனும் ஒருபெயரைத் தமக்கு அடுத்துநிற்கப் பெறுவன பெயரெச்சமாம்.

எனவே பெயரெச்சம் கொண்டுமுடியும் சொல் பெயர்ச்சொல் லாம். ஓரோ விடங்களில் தொழிற்பெயரையும் கொண்டு முடியும். தொழிற்பெயரைக் கொண்டு முடியும்போது பெரும்பாலும் பெய ரெச்சத்தின் பகுதியினடியாய்ப் பிறந்த தொழிற்பெயராக விருக்கும்.

நடந்த மனிதன் —பெயர்கொண்டு முடிந்தது.

செய்த செய்கை, கூறிய கூற்று—தொழிற்பெயர் கொண்டு முடிந்தது.

செய்கை, கூற்று எனும் தொழிற்பெயர்கள் செய்த, கூறிய என்பவற்றின் பகுதிகளாய செய், கூறு என்பவற்றினடியாய்ப் பிறந்தவையாதல் நோக்குக.

பெயரெச்சத்திற்கு உரிய விகுதிகள் அ, உம் இரண்டுமே. அகரம் இறந்தகால, நிகழ்காலங்களிலும், உம் எதிர்காலத்திலும் வழங்கும்.

(உ-ம்.) நடந்த மனிதன் —இறந்தகாலம்.
நடக்கின்ற மனிதன் —நிகழ்காலம்.
நடக்கும் மனிதன் —எதிர்காலம்.

எதிர்மறைப் பெயரெச்சம். ஆகார இடைநிலைபெற்ற பெயரெச்சங்கள் எதிர்மறையாம்.

(உ-ம்.) நடவாத குதிரை. [இது மூக்காலத்துக்கும் பொது.]

இப்பெயரெச்சத்திலுள்ள ஈற்றுத் தகரம் கெட்டு வருதலுமுண்டு. அக்காலத்ததனை ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமென்க. (உ-ம்.) நடவாக் குதிரை.

குறிப்புப் பெயரெச்சம். பண்புப்பெயர்கள் அகரவிகுதியேற்று வருவன குறிப்புப் பெயரெச்சமாம்.

(உ-ம்.) நன்மை + அ = நல்ல.
தீமை + அ = தீய.

வினையெச்சம். தொழிலையும் காலத்தையும் காட்டி பிறவற்றைக் காட்டாது ஏதேனும் ஓர் வினையைக்கொண்டு முடியும்.

செய்து, செய்பு, செய்யூ, செய்யா, செய்தென, செய, செய்யிய, செய்யியர், செய்வான், இருப்பான், செய்பாக்கு என்பவற்றைப் போன்றிருக்கும்.

உ, பு, ஊ, ஆ, என, அ, இய, இயர், வான், பான், பாக்கு முதலியன வினையெச்ச விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்து, நகுபு, நடத்த, நடப்பான்—வந்தான்.

எதிர்மறை வினையெச்சம். முற்கூறிய வினையெச்சத்தைப் போன்று ஆமல், ஆமை முதலிய விகுதிபெறின் எதிர்மறை வினையெச்சமாம். (உ-ம்.) செய்யாமை, செய்யாமல்—வந்தான்.

குறிப்பு வினையெச்சம். பண்புப் பெயரோடு றி, ஆமல், து, கால் முதலிய விகுதி பெறுவனவாம்.

(உ-ம்.) அன்றி, அல்லாமல், அல்லது, அல்லாக்கால்.

வினையெச்சம் கொண்டு முடியும் சொற்கள் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களாம்.

(உ-ம்.) நடந்து வந்தான் —வினைமுற்று.
நடந்து வந்த மனிதன் —பெயரெச்சம்.
நடந்து வந்து படித்தான்—வினையெச்சம்.
நடந்து வருதல் —தொழிற்பெயர்.
நடந்து வந்தவன் —வினையாலணையும்பெயர்.

தொழிற்பெயர். வினையடியாய்ப் பிறந்து அவ்வினைக்கே பெயராய் வருவது. இது பலவகைப்படும்.

1. விகுதி பெற்றுவரும் தொழிற்பெயர்கள்.
தொழிற் பெயர்க்குரிய விகுதிகள் தல், அல், கை, து, அம், பு, சி, மை முதலியன.

(உ-ம்.) வருதல், சேரல், வருகை, வரத்து, ஓட்டம், தொடர்பு, எழுச்சி, வருகின்றமை.

2. முதனிலை அல்லது பகுதியே தொழிற்பெயராய் வருவன.

(உ-ம்.) நகை, பகை, சொல், அடி, மிதி.

3. பகுதியின் ஈற்றுமெய் இரட்டித்து வருவன.

(உ-ம்.) ஊறு, ஊற்று; பாடு, பாட்டு.

4. பகுதியின் முதல் நீண்டு வருவன.

(உ-ம்.) படு, பாடு; சுடு, சூடு.

5. எதிர்மறைத் தொழிற்பெயர் பெரும்பாலும் ஆமை விகுதி சேர்ந்ததுண்டாம்.

(உ-ம்.) சேராமை, சொல்லாமை.

தொழிற்பெயரில் பெரும்பாலானவை காலங்காட்டுவனவல்ல. எனினும் மை விகுதி பெற்றுவரும் தொழிற்பெயர் காலங்காட்டும்.

(உ-ம்.) வந்தமை —இறந்தகாலம்.
வருகின்றமை —நிகழ்காலம்.

வினையாலணையும்பெயர். வினையையுடைய பொருளுக்குப் பெயராய் இருதிணை ஐம்பாலினும், மூவிடங்களினும், முக்காலங் களையுங் காட்டிவரும்.

பெயரெச்சங்களோடு ஒவ்வோர் பாலுக்கும் இடத்துக்குமுரிய விகுதிகள் சேர அப்பாலின் வினையாலணையும் பெயராகும்.

(உம்.) நடக்கின்றவன் —நிகழ்காலம், ஆண்பால்.
நடந்தவள் —இறந்தகாலம், பெண்பால்.
நடப்பவர் —எதிர்காலம், பலர்பால்.
நடந்தது —இறந்தகாலம், ஒன்றன்பால்.
நடந்தவை —இறந்தகாலம், பலவின்பால்.

எதிர்மறைப் பெயரெச்சத்தோடு விகுதிகள் சேர, சேர்ந்த விகுதிக்குரிய எதிர்மறை வினையாலணையும் பெயருண்டாம்.

(உ-ம்.) நடவாத + அன் - நடவாதவன்.—ஆண்பால் எதிர்மறை வினையாலணையும் பெயர்.

இடைச்சொல். (*Particles.*)

பெரும்பாலும் தமக்கென யாதும் பொருளில்லாதனவாய்ப் பெயர் வினைகளை யடுத்துவருவன இடைச்சொற்களாம்.

அவையாவன:—ஐ, ஆல் முதலிய வேற்றுமை யுருபுகள்;
விகுதி முதலிய வினையுருபுகள்;
அன், ஆன் முதலிய சாரியைகள்;
போல, புரைய முதலிய ஒப்புருபுகள்;
ஏ, ஓ முதலிய தத்தம் பொருளுணர்த்துபவை;
ஏ முதலிய அசைகள்;
மன் முதலிய இசைகள்;
மற்றும் குறிப்பினால் வருபவை.

இவ்விடைச்சொற்கள் பெயர், வினைகளை யடுத்து ஒன்றும் பலவும் வருதலுமுண்டு.

தத்தம் பொருளுணர்த்துவன ஏ, ஓ, உம், என, மற்று முதலியன.

ஏகாரம். இது பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தெளிவு, இசைநிறை முதலிய ஆறு பொருட்களில் வரும்.

(உதாரணம்.)

நீயேதந்தாய்	—பிரிநிலை.
அவனே கொடுத்தவன்	—வினா. [அவனோ என்பது பொருள்.]
பூவே, சாந்தே, பாகே, எண்ணெயே, அணிகலமே	எண். [பூவும், சாந்தும்......என்பது பொருள்.]
'நெல்லினுட்பிறந்த பதராகும்மே'	—ஈற்றசை.
சென்றவன் இவனே	—தெளிவு.
'ஏ ஏ யிவளொருத்தி பேடியோ வென்றார்'	இசைநிறை.

ஓகாரம். இது ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என எட்டுப்பொருளில் வரும்.

(உ-ம்.) விளையாடவோ வந்தேன்.—இதில் விளையாடுதற்கன்று பிறிதொன்றுக்கென இசைத்தலில் ஒழியிசை.

நீயோ? அவனோ?	—வினா.
ஓ ஓ பெரியன்	—சிறப்பு.

நீயோ நடந்தாய் —நீ நடந்திலை எனக் குறித்தலின் எதிர்மறை.

ஆணோ அதுவுமன்று
பெண்ணோ அதுவுமன்று } தெரிநிலை.

ஓ ஒ இதுவும் விதிவசமோ—கழிவு. [கடந்ததற்குப் பரிதபித்தல்.]

'கடைதிறந்திடுமினோ' —அசைநிலை.

நீயோ கொடுத்தாய் —பலருள் ஒருவனைப் பிரித்து நோக்கிக் கூறலின் பிரிநிலை.

உம் இது, எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என எட்டுப்பொருளில் வரும்.

(உ-ம்.) அவன் படிக்கவும் செய்வான் —இதில் படியாமலுமிருப்பான் என்பது தொனித்து நிற்றலின் எதிர்மறை.

அரசனும் அவைக்கு வந்தான் —உயர்வுசிறப்பு.
நாயும் தீண்டாது இவ்வுணவை —இழிவுசிறப்பு.
அவன் வந்தாலும் வருவான் —ஐயம்.
இராமனும் வருவான் —எச்சம்.
இருகண்ணும் குருடு —முற்று.
அவனும் இவனும் —எண்.
ஆணும் அன்று பெண்ணும் அன்று —தெரிநிலை.
பாலுமாயிற்று —ஆக்கம்.

என, என்று. இவை பெயர், வினை, குறிப்பு, எண், இசை, பண்பு இப்பொருட்களை யடுத்துவரும்.

(உதாரணம்.)

மூடனென ஒருவன் —பெயரடுத்தது.
உனைக்கண்டேனென நான் மகிழ்ந்தேன் —வினையடுத்தது.
'பொள்ளென வாங்கே புறம்வேரார்' —குறிப்படுத்தது.
'நிலமென நீரெனத் தீயென வளியென வரும்
பூதம் நான்கு முருவம்' } எண்ணடுத்தது.
'நிலையருங் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்தது' —இசையடுத்தது.
வெள்ளென விளர்த்தது —பண்படுத்தது.

என்று என்பதையும் இவ்வாறே அடுத்துகொள்க.

மற்று. இது வினைமாற்று, அசைநிலை, பிறிது முதலிய பொருட்களில் வரும்.

(உ-ம்) 'மற்றறிவா நல்வினையா மிளைய மென்னாது' —வினைமாற்று.
'மற்றடிகள் கண்டருளிச் செய்ய மலரடிக்கீழ்' —அசைநிலை.
'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்' } பிறிது.

உரிச்சொல்.

(*Qualifying Words.*)

எல்லாப்பொருட்களுக்கும் சேர்ந்த குணம் அல்லது பண்பை விளக்கும் சொல்லே உரிச்சொல்லாம். இது பெரும்பாலும் செய்யுட்கே உரிமையாதல் நோக்கி இதனை உரிச்சொல்லென்றார் போலும்.

குணங்கள் உயிருள்ளவற்றுக்குரிய அறிவு, ஆசை, மயக்கம், நினைவு, வெறுப்பு, நாணம், கோபம், துணிவு முதலியனவும் உயிரற்றவற்றுக்குரிய வடிவம், அளவு, நாற்றம் முதலியனவுமாம்.

குணத்தைக் குறிக்கும் சொற்கள் தம்மை யுணர்த்தும்போது பண்புப்பெயராம்.

(உ-ம்.) கருமை, செம்மை.

ஒரு சொல்லுடன் சேர்ந்து பண்புருபாம் ஆகிய எனும் சொல் தொக்குநிற்கும்போது பண்புத்தொகையாம்.

(உ-ம்.) கரும்பலகை, செம்மண். இவற்றை விரிக்க—கருமையாகிய பலகை, செம்மையாகிய மண் எனவாம்.

ஒரு சொல்லொடு சேர்ந்தும் இடையில் ஆகியவெனும் சொல் தொக்குநிற்கா திருக்குமேல் அப்போது உரிச்சொல்லாம்.

(உ-ம்.) சாலப்பேசினான்.

உரிச்சொல் பெயரொடு சேர்ந்துவரும்போது பெயருரியெனவும் வினையொடு சேர்ந்துவரும்போது வினையுரியெனவும் பெயர் பெறும்.

(உ-ம்.) மிகப்பலர் ...பெயருரி.
மிகப்பேசினான் ...வினையுரி.

ஓரே உரிச்சொல் பல குணங் குறித்தலும் பல உரிச்சொற்கள் ஒரே குணங் குறித்தலும் உண்டு.

கடியென்னும் உரிச்சொல் கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி முதலிய பலபொருட்களில் வரும்.

(உதாரணம்.)

'கடிநுனைப்பகழி' ... ...கூர்மை.
'கடிநகர்கடந்துபோனான்' ... ...காப்பு.
'கடிமலர்' ... ...புதுமை.

'எம்மம்புகடிவிடுது நும்மரண்சேர்மின்' ...விரைவு.
'கண்ணாடியன்ன கடிமார்பன்' ... ...விளக்கம்.
'கடியுண்கடவுட் கிட்டசெழுங்குரல்' ...மிகுதி.

சால, உறு, தவ, நனி, கூர், கழி இவ்வாறும் மிகுதியெனும் ஒரு பொருளைக் குறிக்கும்.

(உ-ம்.) 'பருவுந்துசாலப்பலகொலென்றெண்ணி'
'உறுபுனறந்துலகூட்டி'
'ஈயாதுவீயுமுயிர்தவப்பலவே'
'வந்துநனிவருந்தினைவாழியென்னெஞ்சே'
'பொறைநில்லாநோய்கூர்ப்புல்லென்றிசினே'
'காமங்கழிகண்ணோட்டம்'

புணர்ச்சி. (*Sandhi or Combination of Letters.*)

புணர்ச்சிவிளக்கம். மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் ஈறாகவுடைய சொற்கள் மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் முதலாகவுடைய சொற்களோடு வேற்றுமைவழி, அல்வழியெனும் இருவழியினும் புணரும்போது நிலைமொழி, வருமொழிகள் இயல்பாகவே புணர்வதுமுண்டு. அன்றி ஒன்றும் பலவும் விகாரங்களுடன் புணர்வதுமுண்டு.

வேற்றுமைவழியாவது, புணரும் பதங்கட்கிடையே இரண்டு முதல் ஏழு ஈறாகவுள்ள ஆறு வேற்றுமையுருபுகளில் ஏதேனும் ஒன்று விரிந்தேனும் தொக்கியேனும் நிற்கப் புணர்வதாம். வேற்றுமையுருபுகள் தொக்கி நிற்கும்போது வேற்றுமைத் தொகை நிலைத்தொடர் எனவும், விரிந்து நிற்கும்போது வேற்றுமைத் தொகா நிலைத்தொடர் எனவும், வேற்றுமையும் அதன் பொருளைக் குறிக்கும் சொற்களும் தொக்கி நிற்கும்போது வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகை எனவும் வழங்கும்.

(உதாரணம்.)

தொகைநிலை.	தொகாநிலை.	வேற்றுமை.
பொன்னுடையான்	- பொன்னையுடையான்	—2-ம் வேற்றுமை.
கல்லெறிந்தான்	- கல்லாலெறிந்தான்	—3-ம் வேற்றுமை.
சாத்தன் மகன்	- சாத்தனுக்கு மகன்	—4-ம் வேற்றுமை.
மலைவீழ் அருவி	- மலையின் வீழருவி	—5-ம் வேற்றுமை.
மலையுச்சி	- மலையினதுச்சி	—6-ம் வேற்றுமை.
மலைக்குகை	- மலையின்கண்குகை	—7-ம் வேற்றுமை.

மண்குடம் (மண்ணால் ஆகிய குடம்)—மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகை.

அல்வழிப்புணர்ச்சியாவது, வேற்றுமை வழியல்லாத புணர்ச்சியெல்லாம்.—அது வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்து தொகையும், எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், வினைமுற்றுத்தொடர், இடைச்

சொற்றொடர், உரிச்சொற்றொடர். அடுக்குத்தொடர் என எட்டுத் தொடரும் உடையது.

(உதாரணம்.)

சுடு சோறு	—வினைத்தொகை.
செங்கல்	—பண்புத்தொகை.
தேக்குமரம்	—இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
தாமரை வதனம்	—உவமைத்தொகை.
இராமலக்ஷ்மணர்	—உம்மைத்தொகை.
கற்பகக்கை வந்தான்	—அன்மொழித்தொகை.
அவன் வந்தான்	—எழுவாய்த்தொடர்.
இராமா வா	—விளித்தொடர்.
நல்ல பையன்	—குறிப்புப் பெயரெச்சத்தொடர்.
நடந்த பையன்	—தெரிநிலைப்பெயரெச்சத்தொடர்.
இன்றி உண்ணான்	—குறிப்பு வினையெச்சத்தொடர்.
நடந்து வந்தான்	—தெரிநிலை வினையெச்சத்தொடர்.
கொடியன் இவன்	—குறிப்பு வினைமுற்றுத்தொடர்.
வந்தான் இவன்	—தெரிநிலை வினைமுற்றுத்தொடர்.
அணங்கு கொல்	—இடைச்சொற்றொடர்,
சாலப் பேசினான்	—உரிச்சொற்றொடர்.
நெருப்பு நெருப்பு	—அடுக்குத்தொடர்.

இயல்புப்புணர்ச்சியாவது, நிலைமொழி, வருமொழிகளில் யாதும் விகாரமின்றிப் பதங்கள் இருந்தவாறே புணர்வதாம்.

(உ-ம்.) மரம்+விழுந்தது=மரம் விழுந்தது.

விகாரப்புணர்ச்சியாவது, பதங்கள் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய மூவகை விகாரங்களில் ஒன்றும் பலவும் உண்டாகப் புணர்வதாம்.

தோன்றலாவது, இல்லாத எழுத்துக்கள் புதிதாக வந்து சேர்தல்.

(உ-ம்.) மா+காய்=மாங்காய்.

திரிதலாவது, இருந்த எழுத்துக்கள் மாறுபடுதல்.

(உ-ம்.) மரம்+சாய்ந்தது=மரஞ்சாய்ந்தது.

கெடுதலாவது, உள்ள எழுத்து நீங்கிவிடுதல்.

(உ-ம்.) மரம்+வட்டி=மரவட்டி.

தாளை+பூ=தாளம்பூ.—கெடுதல், தோன்றல் இருவிகாரங்கள் வந்தன.

இம்மூன்று விகாரங்களும் பதங்கள் புணரும்போது மாத்திரம் உண்டாகுமாதலின் இவற்றைப் புணர்ச்சிவிகாரம் என்பர்.

வார்த்தைகள் புணராதிருக்கவும் தனித்தனியே நின்ற பதங்களினும் விகாரங்களுண்டாவதுண்டு. அவை பெரும்பாலும் செய்யுளுக்கே உரித்தாதல் நோக்கி அவற்றைச் செய்யுள்விகாரம் என்பர். அது வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என ஆறு பிரிவாம்.

'குறுந்தாள்' - 'குறுத்தாள்' —வலித்தல். [மெல்லொற்று வல்லொற்றாயது.]
'தட்டையினக்கிளி' - 'தண்டையினக்கிளி' —மெலித்தல். [வல்லொற்று மெல்லொற்றாயது.]
'கற்பக நிழல்' - 'கற்பக நீழல்' —நீட்டல். [குறில் நெடிலாயது.]
'நன்றென்றேன் தீயேன்'-'நன்றென்றேன் தியேன்'—குறுக்கல். [நெடில் குறிலாயது.]
'பதாகுமே' - 'பதாகும்மே' —விரித்தல். [இல்லாதவெழுத்துத்தோன்றியது.]
'தொட்டதனைத்தூறும்'-'தொட்டனைத்தூறும்'—தொகுத்தல். [தகரம் கெட்டது.]

புணர்ச்சி. [வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சியென விசேஷித்துக்கூறாத விடங்களில் இருபுணர்ச்சியுமா மெனக்கொள்க.]

1. பதங்கள் எவ்வெழுத்தில் முடியினும் அவற்றின் முன் வருகிற ஞ, ந, ம, ய, வ இயல்பாகவே புணரும்.

(உதாரணம்.)

அல்வழிப்புணர்ச்சி.	வேற்றுமைப்புணர்ச்சி.
ஏழு + ஞாயிறு = ஏழுஞாயிறு.	சுடர் + ஞாயிறு = சுடர்ஞாயிறு.
அது + நாண் = அதுநாண்.	புளி + நீட்சி = புளிநீட்சி.
விண் + மாண்டது = விண்மாண்டது.	விண் + மாட்சி = விண்மாட்சி.
நல்ல + யானை = நல்லயானை.	விளை + யாப்பு = விளையாப்பு.
வேறு + வேடிக்கை = வேறுவேடிக்கை	வெற்றி + வேந்தன் = வெற்றிவேந்தன்

2. தனிக்குறிலடுத்த யகரமெய், ஓரெழுத்தொருமொழியாகிய ஐகாரம், கோ, து இவற்றின்முன் வரும் ஞ, ந, ம மிகுதலுமுண்டு.

(உதாரணம்.)

செய் / கை + நீண்டது / நீட்சி = செய்ந்நீண்டது, கைந்நீண்டது. [அல்வழி.]
செய்ந்நீட்சி, கைந்நீட்சி. [வேற்றுமை.]

நொ / து + நாகா / மாடா = நொந்நாகா. நொம்மாடா, துந்நாகா, தும்மாடா. [நொ, து ஏவல்வினை யாதலின் அல்வழியில் மாத்திரம் புணரும்.]

3. ண, ள, ன, ல இவற்றின் முன் வரும் நகரம் ணகர னகரங்களாகத் திரியும்.

(உதாரணம்.)

பண் / மின் + நன்று / நன்மை = பண்ணன்று, மின்னன்று —அல்வழி.
பண்ணன்மை, மின்னன்மை—வேற்றுமை.

வேள் / வேல் + நல்லன் / நன்மை = வேணல்லன், வேனல்லன் —அல்வழி.
வேணன்மை, வேனன்மை —வேற்றுமை.

4. உயர்திணைப்பெயர், உயர்திணை, அஃறிணை இருதிணைக்கும் பொதுப்பெயர் இவற்றின் ஈற்று மெய் முன் க, ச, த, ப வரின் இயல்பாம்.

(உதாரணம்.)

அவன் + குறியன், சிறியன், தீயன், பெரியன் = அவன்குறியன், அவன்சிறியன், அவன்தீயன், அவன்பெரியன். —உயர்திணை அல்வழி.

அவன் + கை, செவி, தலை, பாதம் = அவன்கை, அவன்செவி, அவன்தலை, அவன்பாதம். —உயர்திணை வேற்றுமை.

ஆண் + குறியன் / குறிது = ஆண்குறியன். / ஆண் குறிது. | பொதுப்பெயர் மெய்முன் ககரம் அல்வழியில் இயல்பானது. பிற வல்லெழுத்துக்களும் அவ்வாறே.

ஆண் + கை, செவி, பல், தலை = ஆண்கை, ஆண்பல், ஆண்செவி, ஆண்தலை. வேற்றுமை.

5. மேற்கூறிய உயர்திணைப்பெயர், பொதுப்பெயர் இவற்றின் ஈற்று உயிர், யகர, ரகரங்கள் முன் க, ச, த, பக்கள் வர இயல்பாம்.

(உதாரணம்.)

வில்லி +	கொடியன்	=	வில்லிகொடியன்.	உயர்திணை அல்வழி.
	சிறியன்		வில்லிசிறியன்.	
	தீயன்		வில்லி தீயன்.	
	பெரியன்		வில்லி பெரியன்.	

வில்லி +	கால்	=	வில்லிகால்.	உயர்திணை வேற்றுமை.
	செவி		வில்லிசெவி.	
	தலை		வில்லிதலை.	
	பாதம்		வில்லிபாதம்.	

தாய் + குறியள், சிறியள் = தாய்குறியள், தாய்சிறியள். தாய் + குறிது, சிறிது = தாய்குறிது, தாய்சிறிது.	பொதுப்பெயர் யகரமுன் அல்வழியில் வலியியல்பானது.
தாய் + கை, செவி = தாய்கை, தாய்செவி	பொதுப்பெயர் யகரமுன் வேற்றுமை.
அவர் + பெரியர், சிறியர் = அவர்பெரியர், அவர்சிறியர்.	உயர்திணை ரகரமுன் அல்வழி.

6. உயர்திணைப்பெயர், பொதுப்பெயர்களோடு நாற்கணமும் புணர விகாரமாதலுமுண்டு.

(உ-ம்.) கபிலன் + பரணர் = கபிலபரணர்.
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்.

7. ஆ, ஓ, ஏ இவற்றை ஈற்றிலுடைய வினைப்பெயர், யாவினா, விளிப்பெயர் இவற்றின்முன் வருகிற க, ச, த, பக்கள் இயல்பாம்.

(உதாரணம்.)

அவனா அவனோ அவனே	+	கொன்றான் சென்றான் பாய்ந்தான் தந்தான்	=	அவனாகொன்றான், அவனாசென்றான், அவனாபாய்ந்தான், அவனாதந்தான். அவனோ கொன்றான், அவனோ சென்றான், அவனோபாய்ந்தான், அவனோதந்தான். அவனே கொன்றான், அவனே சென்றான், அவனேபாய்ந்தான், அவனே தந்தான்.	ஈற்று வினா முன் வலியியல்பு.

யா + { குறிய, சிறிய, பெரிய, தூய } = யாகுறிய, யாசிறிய, யாபெரிய, யாதூய. { யாவினா முன் வலி யியல்பு.

அரச + { கேட்க, சொல்க, தருக, பெறுக } = { அரசகேட்க, அரசசொல்க, அரசதருக, அரசபெறுக { விளி முன் வலி யியல்பு.

8. உயிர், ய, ர, ழ இவற்றை ஈற்றிலுடைய முன்னிலைவினை, ஏவல்வினை முன் வரும் வல்லினம் இயல்பாகும். சிலவிடங்களில் விகற்பித்தலுமுண்டு.

(உதாரணம்.)

படி, செய், சேர், வாழ்	+	கொற்றா, சாத்தா, தேவா, பெரியோய்	=	படிகொற்றா, படிசாத்தா, படிதேவா, படிபெரியோய். செய்கொற்றா, செய்சாத்தா, செய்தேவா, செய்பெரியோய். சேர்கொற்றா, சேர்சாத்தா, சேர்தேவா, சேர்பெரியோய். வாழ்கொற்றா, வாழ்சாத்தா, வாழ்தேவா, வாழ்பெரியோய். { ஏவல் வினைமுன் வலியியல்பு.
உண்டனை, உண்டாய்	+	கொற்றா, சாத்தா, தேவா, பெரியோய்	=	உண்டனைகொற்றா, உண்டனைசாத்தா, உண்டனைதேவா, உண்டனைபெரியோய். உண்டாய்கொற்றா, உண்டாய்சாத்தா, உண்டாய்தேவா, உண்டாய்பெரியோய்.
உண்டனிர்	+	கொற்றரே, தேவரே, சாத்தரே, பூதரே	=	உண்டனிர்கொற்றரே, உண்டனிர்சாத்தரே, உண்டனிர்தேவரே, உண்டனிர்பூதரே.

9. இ, ஏ, ஐ என்னும் உயிர்களை ஈற்றிலுடைய சொற்கள்முன் உயிர்வரின் யகரமெய்யும், ஏனை உயிர்களை ஈற்றிலுடைய சொற்கள்முன் உயிர்வரின் வகரமெய்யும் தோன்றும். இந்த யகர, வகர மெய்கள் உடம்படுமெய்களென்றழைக்கப்படும்.

(உதாரணம்.)

கனி, தேனீ, பனை + { அழகு, அழகிது } = { கனியழகு, தேனீயழகு, பனையழகு. [வேற்றுமைப்புணர்ச்சி.]
கனியழகிது, தேனீயழகிது, பனையழகிது. [அல்வழிப்புணர்ச்சி.] }

விள, பலா, கடு, பூ + { அழகு, அழகிது } = { விளவழகு, பலாவழகு, கடுவழகு, பூவழகு. [வேற்றுமைப்புணர்ச்சி.]
விளவழகிது, பலாவழகிது, கடுவழகிது, பூவழகிது. [அல்வழிப்புணர்ச்சி.] }

ஏகாரவீற்றின்முன் உயிர்வர வகரம் வருதலின்றி யகரமும் உடம்படுமெய்யாக வரும்.

(உ-ம்.) சே + அடி = சேவடி ; ஏயே இவளொருத்தி பேடி.

10. எகரவினா, அ, இ, உ என்னும் முச்சுட்டு இவற்றின்முன் உயிரேனும் யகரமேனும் வந்து புணர வகரமெய்யும், யகரந்தவிர்ந்த மற்ற மெய்யெழுத்துக்கள் வந்து புணர வந்த மெய்யே இரட்டியும் தோன்றும். செய்யுளிலாகாரமாகச் சுட்டு நீண்டவிடத்து யகரமெய் தோன்றும்.

(உதாரணம்.)

அ, இ, உ, எ + { அலை, யானை, கடல் } = {
அவ்வலை, அவ்யானை, அக்கடல்.
இவ்வலை, இவ்யானை, இக்கடல்.
உவ்வலை, உவ்யானை, உக்கடல்.
எவ்வலை, எவ்யானை, எக்கடல். }

அ + இடை = ஆயிடை. [செய்யுள்.]

11. குற்றுகரத்தை இறுதியாகவுடைய சொற்களோடு உயிர் புணரின் குற்றுகரங்கெட நின்ற மெய்யில் உயிரேறும். யகரம் புணரின் உகரம் இகரமாகத் திரியும். ஒரோவிடங்களில் முற்றுகரமும் இவ்விதி யொப்ப நடக்கும்.

(உதாரணம்.)

சுக்கு + அழகு = சுக்கழகு —(வேற்றுமை).
சுக்கு + அழகிது = சுக்கழகிது —(அல்வழி).

சுக்கு + யாது = சுக்கியாது —(அல்வழி). யகரம்வர இகரமானது.
படகு + யாத்தான் = படகியாத்தான்—(அல்வழி).
கதவு + அழகிது = கதவழகிது —(அல்வழி). முற்றுகரம் குற்றுகரவிதி
கதவு + அடை = கதவடை —(வேற்றுமை). [யையனுசரித்தது.

12. உயிரீற்றுப் புணரியல். இயல்பாகவேனும் விதியாகவேனும் உயிரை ஈற்றிலுடைய சொற்களோடு க, ச, த, பக்கள் வந்து புணரின் வந்தவை இரட்டும். இது பொதுவிதி.

(உ-ம்.) சுக்கு + கடிது = சுக்குக்கடிது. மர + கட்டை = மரக்கட்டை. சுக்கு இயல்பான உயிரீறு. மரம் எனும் பதம், ம் கெட்டு, 'மர' என நின்றது விதியீறு.

பலவிடங்களில் வந்தவை இரட்டாது வருவதுண்டு. அவை பின்வருமாறு:—

13. உயிரீற்று மரப்பெயர்களுக்கு முன் க, ச, த, பக்கள் வரின் பெரும்பாலும் இவற்றின் இனவெழுத்துக்கள் தோன்றும். இனவெழுத்துத் தோன்றாது வந்த வெழுத்தே இரட்டுதலும் உண்டு.

(உ-ம்.) மா + காய் = மாங்காய். [இனம் தோன்றியது.]
வாழை + காய் = வாழைக்காய். [வந்தது இரட்டியது.]

14. அகரவீறு. செய்யியவெனும் வாய்ப்பாட்டு வினையெச்சங்கள், உம் ஈறு பெற்ற எதிர்காலப்பெயரெச்சந் தவிர்ந்த மற்றைப் பெயரெச்சங்கள், வியங்கோள் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று, அ, உடைய வென்னும் ஆறனுருபுகள், பல, சில வெனும் அஃறிணைப்பெயர்கள், அம்ம வெனும் இடைச்சொல் இவற்றின் முன் வரும் க, ச, த, பக்கள் இயல்பாம்.

(உ-ம்.) செய்யிய + புகுந்தான் = செய்யிய புகுந்தான்.

நடந்த, நல்ல, நடக்கின்ற, நடவாத } + பையன் = { நடந்த பையன். நல்ல பையன். நடக்கின்ற பையன். நடவாத பையன்.

வாழ்க + கொற்றவ = வாழ்ககொற்றவ.

வந்தன + குதிரைகள் = வந்தனகுதிரைகள்.

தன / தன்னுடைய + புத்தகம் = { தன புத்தகம். / தன்னுடைய புத்தகம்.

பல / சில + குதிரைகள் = { பல குதிரைகள். / சில குதிரைகள்.

அம்ம + கொன்றான் = அம்ம கொன்றான்.

15. வாழியவென்னும் வியங்கோள்முற்றின் ஈற்று யகரம் சில வேளைகளில் கெட்டு வாழியென இகரவீறாய் நிற்கும். அவ்விகர வீற்றின் முன் வலிவரினும் புணர்ச்சி இயல்பாகவேயிருக்கும்.

(உ-ம்.) வாழிய = வாழி + கொற்றா = வாழிகொற்றா.

16. பல, சிலவென்னும் சொற்கள் தம் முன்னர்த் தாம் வரின் இயல்பாகவேனும் பகர, சகரங்கள் இரட்டியேனும் அகரம் நீங்கிய பின் இயல்பாகவேனும் லவ்வொற்று றவ்வொற்றாகத் திரிந்தேனும் வரும்.

(உ-ம்.) பல + பல = பலபல, பலப்பல, பல்பல, பற்பல.
சில + சில = சிலசில, சிலச்சில, சில்சில, சிற்சில.

பல, சில வென்பவற்றோடு பிறமொழிகள் புணரின் அகரம் நின்றும் நீங்கியும் புணரும். லகரம் புணரும்போது ஆய்தமாதலு முண்டு.

(உதாரணம்.)

பல / சில + ஊழி = { பலவூழி, பல்லூழி. / சிலவூழி, சில்லூழி. | பல / சில + தொடை = { பஃறொடை. / சிஃறொடை.

17. ஆகாரவீறு. செய்யுளில் நெடிலெழுத்தை யடுத்துவந்த ஆகாரவீற்றுச் சொற்களில் ஆ குறுகுதலும் குறுகிப் பின் உகர மேற்று வருதலும் இயல்பாகவே வருதலும் உண்டு. உகரமேற்றலும் இயல்பாதலும் உலகவழக்கிற்கு முரித்தே.

(உ-ம்.) அரா = அர, அரவு.

18. இகர, ஐகாரவீறு. இ, ஐ, ஈற்றுக்குப்பின் அல்வழியில் வரும் வல்லினம் இயல்பாயும் மிகுந்தும் விகற்பித்தும் வரும்.

(உ-ம்.) பனி + காய்ந்தது = பனிகாய்ந்தது.
பனை + காய்ந்தது = பனைகாய்ந்தது. } இயல்பு.

பனி + காலம் = பனிக்காலம்.
தட்டை + பலகை = தட்டைப்பலகை. } மிகுதி.

விழி + குறிது = விழிகுறிது { விழிக்குறிது } பெரும்பாலும் }
தலை + பெரிது = தலைபெரிது | தலைப்பெரிது | வழங்குவதில்லை } விகற்பம்

19. உகரவீறு.—முற்றுகரம். ஒடு என்னும் மூன்றனுருபு, அது என்னும் ஆறனுருபு, ஒரு, இரு, நாலு, அறு, எழு என்னும் எண்ணுப்பெயர், முற்றுகர வினைத்தொகை, அது, இது, உது என்னும் சுட்டுப்பெயர், இவற்றின்முன் வருங் க, ச, த, பக்கள் இயல்பாம்.

(உதாரணம்.)

அவனொடு + போனான் = அவனொடுபோனான் —மூன்றனுருபு.
அவனது + கை = அவனதுகை —ஆறனுருபு.
சுடு + சோறு = சுடுசோறு —வினைத்தொகை.

ஒரு + குதிரை = ஒருகுதிரை
இரு + குதிரை = இருகுதிரை
நாலு + குதிரை = நாலுகுதிரை —எண்ணுப்பெயர்.
அறு + குதிரை = அறுகுதிரை
எழு + குதிரை = எழுகுதிரை

அது, இது, உது } + குதிரை = { அதுகுதிரை, இதுகுதிரை, உதுகுதிரை } — சுட்டுப்பெயர்.

20. குற்றுகரம். வன்றொடர்மொழிக் குற்றுகரத்திற்கு முன் வல்லினம் அல்வழியில் மிகும். வினைத்தொடர்க் குற்றுகரத்திற்கு முன் இயல்பாம்.

(உதாரணம்.)

சுக்கு + கடிது = சுக்குக்கடிது ... ... இரட்டியது.

ஆடு, பகடு } + பெரிது { ஆடுபெரிது —நெடிற்றொடர்
பகடுபெரிது —உயிர்த்தொடர்
எஃகு + கடிது = எஃகுகடிது —ஆய்தத்தொடர்
கன்று + சிறிது = கன்றுசிறிது —மென்றொடர்
பெய்து + கெடுத்தது = பெய்துகெடுத்தது —இடைத்தொடர் } இயல்பானது.

21. டு, று இவ்விரண்டிலும் முடிந்த நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றுகரங்களோடு நாற்கணமும் வேற்றுமையிற் புணர, பெரும்பாலும் டகர, றகரங்கள் இரட்டும்.

(உதாரணம்.)

மாடு+கொம்பு=மாட்டுக்கொம்பு. ஆறு +நீர் =ஆற்றுநீர்.
பகடு+கொம்பு=பகட்டுக்கொம்பு. வயிறு+நோய் =வயிற்றுநோய்.
மாடு+வால் =மாட்டுவால். ஆறு +வெள்ளம் =ஆற்றுவெள்ளம்.
பகடு+வால் =பகட்டுவால். வயிறு+வலி =வயிற்றுவலி.
காடு +அதர் =காட்டதர்.
உதடு+அழகு=உதட்டழகு.

22. இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்றிரட்டாத நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றுகரங்களின் முன் வல்லினம் வேற்றுமைவழியில் இயல்பாகும்.

(உதாரணம்.)

தெள்கு+கால் =தெள்குகால். வரகு+கதிர் =வரகுகதிர்.
எஃகு +கடுமை =எஃகுகடுமை. நாகு+செவி =நாகுசெவி.

23. சில மென்றொடர்மொழிக் குற்றுகரங்கட்குமுன் நாற்கணமும் வேற்றுமைவழியிற் புணர, மெல்லொற்று வல்லொற்றாக மாறும்.

(உதாரணம்.)

இரும்பு+அடுப்பு=இருப்படுப்பு. கரும்பு+வில் =கருப்புவில்.
சுரும்பு+நாண் =சுருப்புநாண். மருந்து+பை =மருத்துப்பை.

24. சில மென்றொடர்க் குற்றுகரமொழிகள் ஐகாரச்சாரியை பெற்றுப் புணரும்.

(உதாரணம்.)

அன்று+நாள்=அற்றைநாள். பண்டு+காலம்=பண்டைக்காலம்.

25. திசைப்பெயரோடு திசைப்பெயர் வந்து புணர ஈற்றெழுத்துக்கெட்டு ஈற்றயலெழுத்தாகிய ககரவொற்று நீங்குதலும், மற்று, றகரம் லகரமாதலும் ணகரமாதலும் உண்டு. திசைப்பெயரோடு பிறபதங்கள் புணர, மேற்கூறிய விகாரங்களடைதலின்றி ஈற்றுயிரெழுத்தும் கெடாமற் புணர்வதும், றகரம் லகரமாய்த் திரிதலும்,

திரிந்த லகரம் ஐகாரமேற்றலும், கிழக்கிலுள்ள இகரம் நீண்டுவருதலுமாய பலவிகாரங்களடையும்.

(உதாரணம்.)

வடக்கு + { மேற்கு = வடமேற்கு / கிழக்கு = வடகிழக்கு } ஈற்றீரெழுத்தும் கெட்டன.

தெற்கு + { மேற்கு = தென்மேற்கு / கிழக்கு = தென்கிழக்கு } றகரம் னகரமானது.

மேற்கு + ஊர் = மேலூர் —றகரம் லகரமானது.

மேற்கு + குளம் = மேலைக்குளம். கிழக்கு + குளம் = கீழைக்குளம்.

26. ஒன்றுமுதல் எட்டீறாகவுள்ள எண்ணுப் பெயர்களோடு பெயர்ச்சொற்கள் புணர முதலிரண்டின் முதல்நீண்டும், மூன்று, ஆறு, ஏழு, இம்மூன்றும் முதல்குறுகியும், ஆறு, ஏழு தவிர்ந்த மற்ற ஆறு எண்களிலும் ஈற்றிலுள்ள உயிர்மெய் கெடுதலும், ஏழிலுள்ள ஈற்றுயிர் கெடுதலும், அவற்றோடு—

ஒன்றிலுள்ள னகரம் ரகரமாதலும் உகரமேற்றலும்,

(உ-ம்.) ஒன்று + குதிரை = ஓர்குதிரை, ஒருகுதிரை.

இரண்டிலுள்ள ணகரவொற்றும் அகரவுயிரும் ஏகுதலும் உகரமேற்றலும்,

(உ-ம்.) இரண்டு + குதிரை = இருகுதிரை. இரண்டு + ஆண்டு = ஈராண்டு.

மூன்றிலுள்ள மெய் கெடுதலும், வந்த மெய் யிரட்டுதலும்,

(உ-ம்.) மூன்று + குதிரை = முக்குதிரை. மூன்று + ஆயிரம் = மூவாயிரம்.

நான்கிலுள்ள னகரம் லகர, றகரமாதலும்,

(உ-ம்.) நான்கு + ஆண்டு = நாலாண்டு. நான்கு + குதிரை = நாற்குதிரை.

ஐந்திலுள்ள நகரம் உயிர்வரும்போது கெடுதலும், மெலியும் இடையும் வர, வந்த இனமாகத் திரிதலும், வலிவர வந்ததற்கினமாகத் திரிதலும்,

(உ-ம்.) ஐந்து + ஆண்டு = ஐயாண்டு.

ஐந்து + வகை = ஐவ்வகை. ஐந்து + மாதம் = ஐம்மாதம்.

ஐந்து + பொறி = ஐம்பொறி.

(உ-ம்.) ஆறு + சுவை = அறுசுவை. [முதல் குறுகிற்று.]

(உ-ம்.) ஏழு + காணி = எழுகாணி. ஏழு + ஊர் = எழூர்.

எட்டின் டகரம் ணகரமாதலும் உண்டு.

(உ-ம்.) எட்டு + கலம் = எண்கலம்.

27. ஒன்பது என்னும் எண்ணோடு பத்தும் நூறும் புணர, முதலெழுத்து தகரத்தோடுசேர, பதுநீங்கி, னகரவொற்று ணகர, ளகரமாகத்திரிந்து, பத்தும் நூறும் முறையே நூறும் ஆயிரமுமாக மாறும்.

(உதாரணம்.)

ஒன்பது + பத்து = தொன்பது + பத்து
= தொன் + பத்து
= தொண் + பத்து = தொண் + நூறு = தொண்ணூறு.

ஒன்பது + நூறு = தொன்பது + நூறு
= தொன் + நூறு
= தொள் + நூறு
= தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம்.

28. ஒன்றுமுதல் பத்துவரை உள்ள எண்களுள் ஒன்பது நீங்க ஏனையவை யிரட்டின் நிலைமொழி முதலெழுத்துத் தவிர மற்றவை கெட வருமொழி உயிரெழுத்தாயின் உடம்படுமெய்யும், மெய்யெழுத்தாயின் வந்தவெழுத்தும் தோன்றும்.

(உதாரணம்.)

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று. மூன்று + மூன்று = மும்மூன்று.

இரண்டு + இரண்டு = இவ்விரண்டு. நான்கு + நான்கு = நந்நான்கு.

ஐயைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

29. ஊகாரவீறு. பூப்பெயரோடு வலிபுணர வலிக்கினமாம் மெல்லெழுத்துத் தோன்றியும் வலியிரட்டியும் வரும்.

(உ-ம்.) பூ + சோலை = பூஞ்சோலை, பூச்சோலை.

30. ஏகார, ஓகாரவீறு. இடைச்சொற்களாகிய ஏகார, ஓகாரங்களுக்கு முன் வரும் வலி இயல்பாகும்.

(உ-ம்.) அவனே + செய்தான் = அவனே செய்தான்.
அவனோ + செய்தான் = அவனோ செய்தான்.

31. ஐகாரவீறு. ஐகாரவீற்றின் முன் வலிவர, வேற்றுமை வழியில் ஐ கெட்டு அம் சாரியையும் ஏற்கும்.

(உ-ம்.) மாதளை + காய் = மாதளங்காய்.

32. மெய்யீற்றுப்புணர்ச்சி. மெய்யில் முடிந்த பதங்கள் முன் உயிர்வர, வந்தவுயிர் மெய்யொடு சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாம்.

(உ-ம்.) சேய + அழகு = சேயழகு. [வேற்றுமை.]
கலன் + அழகிது = கலனழகிது. [அல்வழி.]

33. தனிக்குறிலடுத்த மெய்யின்முன் உயிர்வர, குறிலடுத்த மெய்யிரட்டிப் பின் நின்ற மெய்யொடு உயிர் ஒன்றி உயிர்மெய்யெழுத்தாம்.

(உ-ம்.) கல் + அழகு = கல்லழகு. [வேற்றுமை.]
கல் + அழகிது = கல்லழகிது. [அல்வழி.]

34. யகாரந்தவிர்ந்த மெய்ம்முன் யகாரம் வர, நிலைமொழியீற்று மெய்யொடு இகாரந்தோன்றிப் பின் இயல்பாம்.

(உ-ம்.) செய்யுள் + யாப்பு = செய்யுளியாப்பு. [வேற்றுமை.]
செய்யுள் + யாது = செய்யுளியாது. [அல்வழி.]

35. ணகார, னகாரவீற்றின் முன் வேற்றுமை வழியில் வல்லினம் வர ணகார, னகாரங்கள் முறையே டகார, றகாரங்களாகத் திரியும். பிறவெழுத்து வர இயல்பாம். அல்வழியில் எவ்வெழுத்துவரினும் இயல்பாம்.

(உதாரணம்.)

மண் + கலம்	= மட்கலம்.	வேற்றுமையில் வலி வர, டகார, றகாரங்களாயின.
பொன் + கலம்	= பொற்கலம்.	

மண் + வீடு	= மண்வீடு.	இடையினமும் மெல்லினமும் வர, வேற்றுமையில் இயல்பாயின.
பொன் + வளையல்	= பொன்வளையல்.	
மண் + மனை	= மண்மனை.	
பொன் + மணி	= பொன்மணி.	
மண் + கடிது	= மண்கடிது.	அல்வழியில் வலி, மெலி, இடை வந்தும் இயல்பாயின.
பொன் + கடிது	= பொன்கடிது.	
மண் + மாண்டது	= மண்மாண்டது.	
பொன் + மாண்டது	= பொன்மாண்டது.	
மண் + வீழ்ந்தது	= மண்வீழ்ந்தது.	
பொன் + வீழ்ந்தது	= பொன்வீழ்ந்தது.	

36. தனிக்குறிலடுத்து வாராத ணகர, னகரங்களுக்கு முன் நகரம் வர, வந்த நகரம் நிலைமொழியீற்றிலுள்ள ணகர, னகரங்களாகத் திரிய நிலைமொழியீற்றெழுத்துக் கெடும்.

(உதாரணம்.)

பூண் + நன்று = பூண் + ணன்று = பூ + ணன்று = பூணன்று.
வேலன் + நல்லன் = வேலன் + னல்லன் = வேல + னல்லன் = வேலனல்லன்.
[அல்வழி.]

பூண் + நலம் = பூணலம்.	வேற்றுமை.
வேலன் + நலம் = வேலனலம்.	

37. தன், என் என்பவற்றின்முன் வலிவர, இயல்பாகவேனும் ஈற்று னகரம் றகரமாகத் திரிந்தேனும் புணரும். நின் என்பதன் முன் வலிவர இயல்பாகப் புணரும்.

(உ-ம்.) தன் + பகை = தன்பகை, தற்பகை.
என் + பகை = என்பகை, எற்பகை.
நின் + பகை = நின்பகை.

38. லகர, ளகரவீற்றின்முன் வலிவர, வேற்றுமை வழியில் முறையே றகர, டகரங்களாகும். அல்வழியில் றகர, டகரங்களாகியும்

ஆகாதும் வரும். மெலிவரின் இருவழியிலும் னகர, ணகரங்களாகும். இடைவர இருவழியும் இயல்பாம்.

(உதாரணம்.)

கல் + குடம் = கற்குடம்.			வேற்றுமையில் லகர ளகரங்கள் றகர, டகரங்களாயின.
கள் + குடம் = கட்குடம்.			
கல் + சாய்ந்தது = கல்சாய்ந்தது, கற்சாய்ந்தது.			அல்வழியில் இயல்பும் திரிபும்.
முள் + பெரிது = முள்பெரிது, முட்பெரிது.			
முள் + முடி = முண்முடி.	வேற்றுமை.		மெலிவர இருவழியிலும் னகர, ணகரங்களாயின.
வாள் + மாண்பு = வாண்மாண்பு.			
கல் + மலை = கன்மலை.	அல்வழி.		
வாள் + மாண்டது = வாண்மாண்டது.			
கல் + வெடிப்பு = கல்வெடிப்பு.	வேற்றுமை.		இடைவர இருவழியிலும் இயல்பாயின.
வேள் + வலி = வேள்வலி.			
கல் + வீழ்ந்தது = கல்வீழ்ந்தது.	அல்வழி.		
வேள் + வென்றான் = வேள்வென்றான்.			

39. தனிக்குறிலடுத்த லகர, ளகரங்களுக்கு முன் அல்வழியில் தகரம்வரின் ஆய்தமாதலுமுண்டு.

(உ-ம்.) கல் / முள் + தீது = கஃறீது. / முஃடீது.

40. தனிக்குறிலையடுத்து வராத லகர, ளகரங்களுக்கு முன் அல்வழியில் தகரம் வர, வந்த தகரம் றகர, டகரங்களாக மாறும். அப்பொழுது நிலைமொழியீற்று லகர, ளகரங்கள் கெடும். இருவழியிலும் நகரம் வரின் வந்த நகரம் னகர, ணகரங்களாக மாற நிலைமொழி லகர, ளகரங்கள் கெடும். இருவழியிலும் வல்லெழுத்துக்கள் வர இயல்பாகவும் திரிந்தும் புணரும்.

தோன்றல் } + தீயன் = { தோன்றல் + தீயன் = தோன்ற + தீயன் =
வேள் } { வேள் + டீயன் = வே + டீயன் =

தோன்றறீயன். } அல்வழி.
வேடீயன். }

தோன்றல் } + நலம் = { தோன்றல் + னலம் = தோன்ற + னலம் =
வேள் } { வேள் + ணலம் = வே + ணலம் =

தோன்றனலம். } வேற்றுமை.
வேணலம். }

தோன்றல் } + நல்லன் = { தோன்றல் + னல்லன் = தோன்ற + னல்லன் =
வேள் } { வேள் + ணல்லன் = வே + ணல்லன் =

தோன்றனல்லன். } அல்வழி.
வேணல்லன். }

வாள் + கொடு = வாள்கொடு. வாள் + படை = வாட்படை.
வேல் + கொடு = வேல்கொடு. வேல் + படை = வேற்படை.
வேள் + தாள் = வேட்டாள்.
வள்ளல் + தோள் = வள்ளறோள்.

41. ணகர, ளகரங்களின் முன் தகரம் வரின், வந்த தகரம் டகரமாகும்.

ணகர, ளகரங்களின் முன் நகரம் வரின், வந்த நகரம் ணகரமாகும்.

னகர, லகரங்களின் முன் தகரம் வரின், வந்த தகரம் றகரமாகும்.

னகர, லகரங்களின் முன் நகரம் வரின், வந்த நகரம் னகரமாகும்.

(உதாரணம்.)

பெண் + தீயள் = பெண்டீயள். } அல்வழியில் தகரம் ண, ள முன்
முள் + தீது = முட்டீது. } டானது.

உதாரணம்	விதி
பெண் + தீமை = பெண்டீமை. முள் + தீமை = முட்டீமை.	வேற்றுமையில் தகரம் ண, ள முன் ட வானது.
பெண் + நல்லள் = பெண்ணல்லள். வேள் + நல்லன் = வேணல்லன்.	அல்வழியில் நகரம் ண, ள முன் ண வானது.
பெண் + நலம் = பெண்ணலம். வேள் + நலம் = வேணலம்.	வேற்றுமையில் நகரம் ண, ள முன் ண வானது.
பொன் + தீது = பொன்றீது. கல் + தீது = கற்றீது.	அல்வழியில் தகரம் ன, ல முன் ற வானது.
பொன் + தாலி = பொற்றாலி. கல் + தூண் = கற்றூண்.	வேற்றுமையில் தகரம் ன, ல முன் ற வானது.
பொன் + நன்று = பொன்னன்று. கல் + நன்று = கன்னன்று.	அல்வழியில் நகரம் ன, ல முன் ன வானது.
பொன் + நலம் = பொன்னலம். கல் + நலம் = கன்னலம்.	வேற்றுமையில் நகரம் ன, ல முன் ன வானது.

இதற்கு முந்திய ஆறுவிதிகளில் ணகர, னகர, லகரவீற்றுச் சொற்களிலுள்ள ஈற்றெழுத்துக்களின் விகாரங்களைக் கூறினர். இவ்விதியில் அவ்வீற்றெழுத்துக்களோடு புணரும் தகர, நகரங்கள் அடையும் விகாரங்களைக் கூறியவாறு.

42. மகரவீற்றுச் சொற்களோடு நாற்கணமும் புணர, ஈற்று மகரம் கெடும். வல்லினம் புணரும்போது, மகரம், புணரும் வல்லினத்திற்கு இனமாய்த் திரிதலுமுண்டு.

அல்வழி. வேற்றுமை.

(உ-ம்.)	பவளம் + இதழ், அழகு	= பவளவிதழ், பவளவழகு.	[உயிர்.]
	பவளம் + பாசி, கிண்ணம்	= பவளப்பாசி, பவளக்கிண்ணம்.	[வலி.]
	பவளம் + மணி, நிறம்	= பவளமணி, பவளநிறம்.	[மெலி.]
	பவளம் + வாய், வேர்	= பவளவாய், பவளவேர்.	[இடை.]

43. நும், தம், எம், நம், இவற்றின்முன், ஞகர, நகரங்கள்வர, இவற்றிலுள்ள மகரம் வந்த வெழுத்தாகத் திரியும்.

(உ-ம்.) தம், நும் } + ஞாண் = { தஞ்ஞாண், நுஞ்ஞாண்.
எம், நம் } + ஞாண் = { எஞ்ஞாண், நஞ்ஞாண்.

நும், தம் } + நூல் = { நுந்நூல், தந்நூல்.
எம், நம் } + நூல் = { எந்நூல், நந்நூல்.

44. யகர, ரகர, ழகரவீற்றின்முன் வல்லினம் வந்து புணர, அல்வழியில் இயல்பாகவேனும், வந்த வலி மிகுந்தேனும், வேற்றுமையில் மிகுந்தேனும், இனத்தோடு உறழ்ந்தேனும் புணரும்.

இனத்தோடு உறழ்தலாவது வலியும் மெலியும் மிகுந்தும் வருதல்.

(உதாரணம்.)

நாய் + பெரிது	நாய்பெரிது.	அல்வழி, இயல்பு.
ஊர் + பெரிது	ஊர்பெரிது.	
ஊழ் + பெரிது	ஊழ்பெரிது.	
பொய் + தேகம்	பொய்த்தேகம்.	அல்வழி, மிகுதல்.
கார் + பருவம்	கார்ப்பருவம்.	
பூழ் + பறவை	பூழ்ப்பறவை.	
வேய் + தட்டி	வேய்த்தட்டி.	வேற்றுமை, மிகுதல்.
ஊர் + பேச்சு	ஊர்ப்பேச்சு.	
கூழ் + கம்பு	கூழ்க்கம்பு.	
வேய் + குழல்	வேய்க்குழல், வேய்ங்குழல்.	வேற்றுமை, இனத்தோடு உறழ்தல்.
ஆர் + கோடு	ஆர்க்கோடு, ஆர்ங்கோடு.	

45. சுட்டடுத்த வகரத்திற்குமுன் வல்லினம்வர, வகரம் ஆய்தமாகும். மெல்லெழுத்துவர, வந்த மெல்லெழுத்தாகத் திரியும். இடையினம் வர இயல்பாகும்.

(உதாரணம்.)

அவ், இவ், உவ்	+	கடிய	= அஃகடிய. இஃகடிய. உஃகடிய.	வலிவர சுட்டுவகரம் ஆய்தமானது.
அவ், இவ், உவ்	+	ஞானம்	= அஞ்ஞானம். இஞ்ஞானம். உஞ்ஞானம்.	மெலிவர சுட்டுவகரம் மெலியானது.
அவ், இவ், உவ்	+	யாவை	= அவ்யாவை. இவ்யாவை. உவ்யாவை.	இடைவர சுட்டுவகரம் இயல்பானது.

உருபுப்புணர்ச்சி. பெயர்ச்சொல்லுக்குரிய எட்டு வேற்றுமையுருபுகளும் தனித்தனியே ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பலவெனும் ஐம்பாற் சொற்களோடும் சேர்வதேயாம். இவை தத்தம் பொருளை உணர்த்துமாறு பெயர்களோடு சேர்ந்து வருவனவாம்.

(உ-ம்.) அவனுக்குக் கொடுத்தான். அவனால் விளைந்தது.

இவற்றுள் கு உருபு கொடைப்பொருளையும், ஆல் உருபு காரணப்பொருளையும் உணர்த்துமாறு பெயர்களுடன் சேர்ந்தன.

இவ்வாறு உருபுகளாவது, பதமாவது, விகுதியாவது பதங்களோடு புணரும்போது, நிலைமொழி வருமொழிகளிலடங்காத சில சப்தங்கள், இடையில் அவற்றைச் சார்ந்து வருவதுண்டு. ஆதலின் அவற்றைச் சாரியையென வழைப்பர்.

அவை அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நும், நம், ஏ, அ, உ, ஐ, கு, ன முதலியவையாம்.

ஒரே புணர்ச்சியில், ஒன்றின்மேற்பட்ட சாரியைகள் வருதலுமுண்டு.

(உ-ம்.) மரம் + ஐ = மரத்தை. [அத்துச்சாரியை.]
மண் + கட்டி = மண்ணாங்கட்டி. [ஆம்சாரியை.]
கரம் + ஐ = கரத்தினை. [அத்து, இன் சாரியைகள்

46. எல்லாம் எனும் சொல் அஃறிணையாயிருப்பின் அதனோடு உருபு புணரும்போது உருபின்முன் அற்றுச்சாரியையும், உருபின் பின் உம்மும் பெறும். உயர்திணையாயிருப்பின் உருபின்முன் நம் சாரியையும், பின் உம்மும் பெறும்.

(உ-ம்.) எல்லாம் + ஆல் = எல்லாவற்றாலும். [அஃறிணை.]
எல்லாம் + ஆல் = எல்லாநம்மாலும். [உயர்திணை.]

47. தான், தாம், நாம் என்பவற்றோடு உருபு புணரும்போது, இவை தன், தம், நம் என முதல் குறுகிப் பின் உருபேற்கும்.

யான், யாம், நீ, நீர் என்பவற்றோடு உருபுபுணரும்போது, இவை முறையே, என், எம், நின், நும் என மாறிப் பின் உருபேற்கும்.

நான்காம் வேற்றுமையுருபாய 'கு' இவற்றோடு சேரும்பொழுது அகரச்சாரியை பெறும். நான்காம் வேற்றுமை அகரச் சாரியை பெறினும், ஆறாம் வேற்றுமையுருபு புணரினும், தனிக் குறிலடுத்த இம்மொழிகளில் ஈற்று ஒற்றுகள் இரட்டா.

(உதாரணம்.)

தான்	+ ஐ =	தன்னை.	யான்	+ ஐ =	என்னை.
தாம்		தம்மை.	யாம்		எம்மை.
நாம்		நம்மை.	நீ		நின்னை.
			நீர்		நும்மை.

தான் + கு = தனக்கு.	யான் + கு = எனக்கு
தான் + அது = தனது.	யான் + அது = எனது.

48. ஆ, மா, கோ இவற்றோடு உருபுகள் புணரும்போது, னகரச்சாரியை பெறுவதுமுண்டு.

(உ-ம்.) ஆ	+ ஐ =	ஆனை, ஆவை.
மா		மானை, மாவை.
கோ		கோனை, கோவை.

49. அவை, இவை, உவை எனுஞ் சுட்டுப்பெயர்களோடு உருபுகள் புணரும்போது அற்றுச்சாரியை பெறும்.

(உ-ம்.) அவை, இவை, உவை + ஐ = அவற்றை, இவற்றை, உவற்றை.

வடமொழிப்புணர்ச்சி :—

தீர்க்கசந்தி : அ, ஆ இவற்றில் ஒன்றையடுத்து அ, அல்லது ஆ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஆ தோன்றும்.

இ, ஈ இவற்றில் ஒன்றையடுத்து இ, அல்லது ஈ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஈ தோன்றும்.

உ, ஊ இவற்றில் ஒன்றையடுத்து உ, அல்லது ஊ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஊ தோன்றும்.

(உ-ம்.) சிவ + ஆலயம் = சிவாலயம்.
கிரி + ஈசன் = கிரீசன்.
குரு + உபதேசம் = குரூபதேசம்.

குணசந்தி : அ, ஆ இவற்றில் ஒன்றையடுத்து இ, அல்லது ஈ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஏ தோன்றும்.

அ, ஆ இவற்றில் ஒன்றையடுத்து உ, அல்லது ஊ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஓ தோன்றும்.

(உ-ம்.) சுர + இந்திரன் = சுரேந்திரன்.
சூரிய + உதயம் = சூரியோதயம்.

விருத்திசந்தி : அ, ஆ இவற்றில் ஒன்றையடுத்து ஏ, அல்லது ஐ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஐ தோன்றும்.

அ, ஆ இவற்றில் ஒன்றையடுத்து ஓ, அல்லது ஔ வர, இரண்டுங்கெட்டு ஓர் ஔ தோன்றும்.

(உ-ம்.) மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்.
திவ்ய + ஔடதம் = திவ்யௌடதம்.

வாக்கியவமைவு.

(*Structure of Sentences.*)

வாக்கியமாவது முற்கூறியுள்ள விதிகளையனுசரித்து முடிந்த பொருளைக் கொடுக்கக்கூடிய சொற்களின் தொடரேயாம்.

வாக்கியத்தின் முக்கிய உறுப்புகள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனமூன்று. இவற்றுள் எழுவாயும் பயனிலையும் இன்றியமையாதவை. மற்றும் இடைப்பிறவரலும், அடைமொழியும் வாக்கிய உறுப்புக்களாம். இவை ஐந்தும் தனித்தனியே வாக்கியத்தில் விரிந்தேனும் தொக்கியேனும் நிற்கும்.

எழுவாய். ஓர் வாக்கியத்தில் வினை எப்பொருளினுடைய தொழிலைக் குறிக்குமோ, அல்லது எப்பொருளைப்பற்றி ஏதேனும் சொல்லப்படுமோ, அப்பொருளே எழுவாயாம்.

(உதாரணம்.)

இராமன் ஓடினான். [இதில் ஓடுதலாகிய தொழில் இராமனது.]

பெட்டி தச்சனால் செய்யப்பட்டது. [செய்யப்படுதலாகிய தொழில் பெட்டியைப் பற்றியது.]

எனவே இவ்வாக்கியங்களுக்கு இராமன், பெட்டி என்பன முறையே எழுவாய்களாம்.

நீ என் செய்தாய்?—கிணற்றில் தண்ணீர் இறைத்தேன்.

பின் வாக்கியத்தில் ‘நான்’ எனும் எழுவாய் தொக்கிநின்றது. முன் வாக்கியத்தில் ‘நீ’ எனும் எழுவாய் தோன்றி நின்றது.

பயனிலை. எழுவாயின் தொழிலைக்காட்டுவது பயனிலையாம்.

(உதாரணம்.)

அவன் இறங்கினான்.
எவன் இறங்கினான்?—அவன்.

‘அவன்’ எனும் பதத்தையடுத்து அதன் பயனிலையாகிய ‘இறங்கினான்’ எனும் வினைமுற்று தொக்கி நின்றது.

[பயனிலையோடு எவன், எது என்னும் வினாச்சொற்களைச் சேர்த்து வினவக்கிடைக்கும் விடை எழுவாயாகும்.]